பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 29 செவ்வாய்க்கிழமை (14-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:261

# தடை செய்யப்பட்ட ஆயுதங்களை கொள்வனவு செய்ததில் ஊழலாம்!

## இராணுவத்தின் மீது குற்றச்சாட்டு

கொழும்பு,ஓகஸ்ட் 14

**அமெரிக்கா மற்றும் நாடுகளினால் தடை விதிக்கப்பட்ட ஒரு வகை றொக்கெட் லோஞ்சர்களை பல நூறு கோடி ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதில பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.**

'த சண்டே லீடர்' பத்திரிகை இது பற்றிய விபரங்களை - இரண்டு பக்கங்களில் - விலாவாரியாக வெளியிட்டுள்ளது.

ஆர்.பி.ஓ. - ஏ.ஸ்மெல் றொக்கெட் லோஞ்சர்கள் (RPO - A Shmel Rocket Launchers) ஆயிரம் கொள்வனவு செய்ததிலேயே இராணுவ உயர் அதிகாரிகள் ஊழல் புரிந்திருப்பதாக அப்பத்திரிகை குற்றஞ்சாட்டுகின்றது.

1984இல் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த றொக்கெட் லோஞ்சர்கள் நான்கு வருடங்களின் பின்னர் பாவனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் அதன் இரசாயனத் தன்மை கருதி அதன் விற்பனையை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தடை செய்தன.

என்றாலும் ரஷ்யா மற்றும் உக்ரேயின் போன்ற நாடுகள் இதனை உற்பத்தி செய்து பயன்படுத்துவதாகவும் - இடைத் தரகர்கள் மூலம் அவற்றைக் கொள்வனவு செய்ய முடியும் எனவும் - கூறப்படுகின்றது.

வான் வழியாகத் தரை இறக்கப்படும் துருப்புகளும் கடல் வழித் தாக்குதல் துருப்புகளும் இலகுவாக சுமந்து சென்று பங்கர்கள், சிறியரக கவசவாகனங்கள் போன்ற வலுவான நிலைகளைத் தகர்க்க இந்த றொக்கெட் லோஞ்சர்களைப் பயன்படுத்த முடியும்.

இந்த றொக்கெட்டுகளில் உள்ள முன்னேற்றகரமான திரவ எரிபொருள், காற்றுடன் சேர்ந்து வெடித்துப் பிளக்

(12ஆம் பக்கம் பார்க்க)



ஆயுதக்கொள்வனவு தொடர்பான விடயத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் RPO - A Shmel Rocket Launchers இவைதான். செலுத்திகளுக்குள் இருக்கும் றொக்கெட்டில் ஒன்றும் அருகில் உள்ளது. தனித் தனிக் குழாய்களுக்குள் றொக்கெட்டுக்கள் இருக்கும். பொதுவாக றொக்கெட்டுகள் அடங்கிய இரு குழாய்கள் ஒன்றாகப் பொருத்தப்பட்டு முதுகில் சுமந்து செல்லக்கூடியதாக அமைந்திருக்கும். அவற்றைத் தனியாக பிரித்தெடுத்து, மடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஏவு ஆளியை (Pistol Grip) நிமிர்த்தி, குழாயைத் தோளில் வைத்து, ஏவு ஆளியை இயக்குவதன் மூலம் றொக்கெட்டை இலக்கை நோக்கிச் செலுத்த முடியும்.

## ஜே.வி.பி. விதித்த நிபந்தனைகளுக்கு சிரேஷ்ட அமைச்சர்கள் எதிர்ப்பு!

கொழும்பு,ஓக.14

தகுதிகாண் அரசு ஒன்றை அமைப்பதற்கு அரசுக்கு ஆதரவு வழங்கும் விவகாரம் தொடர்பாக ஜே.வி.பி. முன்வைத்துள்ள நிபந்தனைகளை பல சிரேஷ்ட அமைச்சர்கள் கடுமையாக எதிர்ப்பதாக இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்களான எஸ்.பி. திஸநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ, மஹிந்த விஜயசேகரா, பட்டி வரக்கோன், மங்கள சமரவீர ஆகியோர் இந்தத் திட்டத்தை கடுமையாக எதிர்த்துள்ளனர்.

அமைச்சர்களான பட்டி வீரக்கோன், மஹிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர ஆகியோர் தனித்தனியாக ஜனாதிபதியைச் சந்தித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிடுகையில் -

ஜே.வி.பி. தனது செல்வாக்கை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சியில் சிக்கி எமது கட்சியின் தனித்துவத்தை நாம் இழக்கக் கூடாது. தகுதி காண் அரசு ஒன்று அமைப்பதிலும் பார்க்க தேசிய அரசு ஒன்று அமைப்பதே நல்லது - என்று தெரிவித்தார்.

அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சி பொதுச் செயலாளருமான பட்டி வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜே.வி.பி. முன்வைத்துள்ள நிபந்தனைகள் ஏற்கக்கூடியவை அல்ல.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையின் அதிகாரிகள் மேலும் 14பேர் விசாரணையில்!

கொழும்பு,ஓக.14

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் 14 விமானப் படை உயர் அதிகாரிகள் விசாரிக்கப்படுவதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானப்படையைச் சேர்ந்த 160 பேர் இதுவரை விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விமானப்படையின் 11அதிகாரிகள் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. இவர்களுக்கு மேலதிகமாக மேலும் 14 அதிகாரிகள் தற்போது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றபோதும் -

இன்னமும் உருப்படியான தகவல்கள் கிடைக்கவில்லை என்று குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவிப்பதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(உ-3)

## 20ஆம் திகதி நாடாளுமன்றைக் கூட்டுமாறு சபாநாயகரை எதிர்க்கட்சிகள் கோரும்

### வெள்ளியன்று கூடி தீர்மானம் எடுக்க முடிவு

கொழும்பு,ஓக.14

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி, நாடாளுமன்றத்தை எதிர்வரும் 20ஆம் திகதி கூட்ட வேண்டும் என்று சபாநாயகரைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவிருக்கின்றனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் குழு அறையில் எதிர்க்கட்சிகள் கூட்டும் கூட்டத்துக்கு சமுகம் தரும் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றே சபாநாயகரிடம் அதை ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கோரி 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சிகள் கடிதம் அனுப்பியுள்ளன.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சிஹல உறுமய தலைவர் சம்பிக ரணவக்க, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் கூட்டாக ஒப்பமிட்டு இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

(உ-3)

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பதவி:

## ஹிஸ்புல்லாவுக்கு நீதிமன்று இடைக்காலத் தடைவிதிப்பு!

கொழும்பு,ஓக.14

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பதவிக்கு உரிமை கோருவதற்கும், தலைவராகச் செயற்படுவதற்கும் எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அவருடன் தெரிவானதாகக் கூறப்படும் தலைமைப்பீட உறுப்பினர்களும் அப்பதவிகளில் செயற்படுவதைத் தடைசெய்யும் இடைக்கால உத்தரவையும் நீதிமன்றம் விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீம் சட்டப்படி செயற்பட்டு வருகின்றார் என்றும் கட்சியின் யாப்புக்கு விரோதமான

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரினர்

கொழும்பு,ஓக.14

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையத்தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் உரிமை கோரியுள்ளதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் பாரிய வெற்றியை அளித்துள்ளதாகவும் தாக்குதலின் போது உயிர் நீத்த தமது உறுப்பினர்களுக்கு சிரம்தாழ்த்துவதாகவும் -

இணையத்தளத்தில் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(ஓ-3)

### புலிகள் தாக்குதலில் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் பிரதான விநியோகப் பாதையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுமுன்தினம் பகல் 10 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

அவர் பொலன்நறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

(உ-ஒ)

## திருமலைத் துறைமுக ஊழியர் வேலை நிறுத்தத்துக்க முஸ்தீபு!

திருகோணமலை,ஓக.14

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு நாடு உள்ளாகியுள்ள இந்தத் தருணத்தில் பல மில்லியன் ரூபாவை லாபமாகப் பெற்றுத்தரும் திருகோணமலை துறைமுகத்தின் சரக்குகளைக் கையாளும் பணியை, தனியாரிடம் அரசு ஒப்படைத்ததைக் கண்டித்து சட்டப்படியான வேலைப் போராட்டம் நடத்தத் திருகோணமலை துறைமுக ஊழியர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பாக அந்தச் சங்கங்கள் கூட்டாக வெளியிட்ட பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளதாவது-

சரக்குகள் கையாளும் பணியைத் தனியாருக்கு வழங்க முன்னர் நாடாளுமன்றத்தில் அது குறித்து விவாதம் நடத்தப்படாதது ஏன்?

தொழிற்சங்கங்களுக்கு மட்டுமன்றி துறைமுகங்கள் அதிகார சபையின் உயர் பீடத்துக்குக் கூட இந்த விடயம் தெரிவிக்கப்படாதது ஏன்?

தனியார் மயப்படுத்தியதால் பாதிப்படையும் ஊழியர்களுக்கு மாற்றுவழியில் நிவாரணம் பெற்றுக்கொடுக்க முன்னேற்பாடுகள் செய்யப்படாதது ஏன்?

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மண்ணில் இருந்து உடலில் தொற்றும் தோல் புழுக்களால் பலர் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.14

நாய், பூனை போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் மலக் கழிவிலிருந்து பரவுவதாகக் கூறப்படும் தோல் துளைப் புழு என்னும் சிறிய நுண்ணங்கியால் பாதிக்கப்பட்ட சிலர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த நுண்ணங்கி மேலும் பரவுவதற்கான ஏதுநிலை காணப்படுவதால் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு மருத்துவ வட்டாரங்கள் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளன.

நாய், பூனை என்பனவற்றின் மலக்கழிவிலிருந்து வெளியேறி மண்ணுடன் கலக்கும் இந்த நுண்ணங்கிப் புழு பின்னர் மண்ணில் இருந்து மனிதர்களின் தோலுக்குத் தொற்றுவதாகக் கூறப்படுகிறது.

'கிரீப்பிங் எரப்சன்' (CREEPING ERUPTION) எனப்படும் இந்த நுண்ணங்கியால் தோல் நோய்க்கு இலக்காகுவோர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வருகின்றனர்.

நல்லூர் ஆலயச் சூழலில் அங்கப் பிரதிஷ்டை செய்த பலரும் கூட இந்த தோல் தொற்று நோய்க்கு இலக்காகி இருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகவும் -

நல்லூர் ஆலய வெளி வீதியில் பக்தர்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு வசதியாகப் பரவப்பட்டிருக்கும் மணல் மண்ணில் இருந்து இந்தக் கிருமித் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றும் -

தகவலறிந்த மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கப்பிரதிஷ்டை செய்யும் போது மணலில் உள்ள நுண்ணங்கிகள் இலகுவில் தோலுக்குத் தொற்ற மிக வாய்ப்பு இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அண்மையில் இத்தோல் புழுவின் தொற்றுக்கு ஆளாகிச் சிகிச்சை பெற ஆஸ்பத்திரிக்குச் சென்றோரில் சிலரது உடலில் தோலின் கீழ்ப் புறத்தில் பத்துக்கும் மேற்பட்ட புழுக்கள் காணப்பட்டதாகத் தெரியவந்திருக்கிறது.

இந்தத் தோல் புழுவை ஒழிப்பதற்கான மருந்து வகைக்கு இங்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் தோலின் கீழ் உள்ள புழுவை மின் உபகரணம் ஒன்றின் மூலம் சுட்டு எரித்து அழிக்கும் மாற்று சிகிச்சை முறை மூலமே இத்தகைய நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் அறியவந்தது.

இதேவேளை -

நல்லூர் ஆலய வீதியில் உறசவத்தை ஒட்டி பரவப்பட்ட மண்ணின் தன்மை குறித்து மருத்துவத் தரப்பினர் சிலர் யாழ்.மாநகர சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரியவந்தது. (ஐ)

# 96இல் இணைப்புப் பெற்றவர்களுக்கு மின்சார சபையின் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.14

1996ஆம் ஆண்டு மின்சார இணைப்புப் பெற்றவர்கள் மின் இணைப்புப் பெறுவதற்கான உரிய படிவங்களைப் பூரணப்படுத்தி ஒப்படைக்கவேண்டும் அன்றேல் அவர்களது மின் இணைப்பு மறு அறிவித்தலின்றித் துண்டிக்கப்படும்.

- இவ்வாறு மின்சார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை மின்சார சபை யாழ். மாவட்ட அலுவலகத்தால் மின்பிறப்பாக்கிகள் மூலம் 96ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் மின் பாவனையாளர்களிடம் விண்ணப்பப் படிவங்கள், உடன்படிக்கைப் படிவங்கள், பிணை வைப்புப் பணம் 1990ஆம் ஆண்டுக்கு முன்னைய மின் நிலுவைகள் எவையும் பெற்றுக்கொள்ளப்படாமல் மின்சாரம் வழங்கப்பட்டது.

தற்போது பாவனையாளர்களுக்கான கோவைகள் சீர் செய்யப்படுகின்றன. மேற்சொல்லப்பட்ட படிவங்களும், பிணை வைப்புப்பணம், நிலுவை போன்றவற்றை பாவனையாளர்களிடமிருந்து பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சில மின் பாவனையாளர்கள் உரிய படிவங்களைப் பூரணப்படுத்தி அலுவலகத்தில் ஒப்படைக்காமலும் உரிய பிணை வைப்புப் பணம், நிலுவைப் பணத்தினை செலுத்தாமலும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே மின்பாவனையாளர்கள் உடன் இவற்றினை வழங்கி சபையுடன் ஒத்துழைக்குமாறு கோருகின்றேன். தவறின் மறுஅறிவித்தலின்றி மின்சாரம் துண்டிக்கப்படும் நேரிடலாம் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும் - என்றுள்ளது.

(உ-3)

# காணாமற்போன 25 பேர் தொடர்பான விசாரணைக்கு உறவினர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.14

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் 25பேரின் விசாரணைகளுக்காக அவர்களது உறவினர்களை யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ ரி.அம்பிகைபாகன்(கோவை இல. B1/434) - குப்பிளான் தெற்கு, ஏழாலை.

★ நமசிவாயம் பாலகேதீஸ்வரன் (கோவை இல. B1/9/143) - அம்மன் கோயிலடி, அரியாலை கிழக்கு.

★ முருகேசு ஜெயராசா (கோவை இல. B1/350) - மத்தியூஸ் வீதி, குருநகர்.

★ அன்ரன் ரிச்சர்ட் கொலின் (கோவை இல. B1/427) - இல.17/7, பீச் றோட், குருநகர்.

★ சவிரிமுத்து அன்ரனி ஜெயக்குமார் (கோவை இல. B1/9/90) - இல.136, ஆத்திகுடி வீதி, கந்தர்மடம்.

இராஜரட்ணம் ஸ்ரீதரன் (கோவை இல. B1/460) - கோப்பாய் தெற்கு.

★ தங்கவேல் சந்திரகுமார் (கோவை இல.B1/468) - தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.

★ அன்ரன் நிர்சன்குமார் (கோவை இல. B1/397) - இல.24, ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ தர்மகுலசிங்கம் கருணாகரன் (கோவை இல. B1/448) - நாவற்குழி மேற்கு, கைதடி.

★ செல்லையா பாலசிங்கம் (கோவை இல. B1/440) - கைதடி நுணாவில், சாவகச்சேரி.

★ தெய்வபாலன் தவபாலன் (கோவை இல. B1/387) - வீரபத்திர கோயிலடி, கச்சாய் றோட், சாவகச்சேரி.

★ ஜேசுதாசன் அமிங்கிலோ (கோவை இல. B1/404) - இல.7, மத்தியூஸ் வீதி, குருநகர்.

★ மனுவல் அந்தோனி(கோவை இல. B1/420) - இல.26, மத்திய மேற்கு வீதி, குருநகர்.

★ எஸ்.மொனாசியஸ்(கோவை இல. B1/433) - குருநகர்.

★ எம்.அல்வின் (கோவை இல. B1/478) - உரும்பிராய் கிழக்கு.

★ இராசையா சதீஸ்குமார் (கோவை இல. B1/363) - மீசாலை வடக்கு.

★ பாலன் சிவராசா(கோவை இல. B1/475) - ஓட்டுவில்.

★ துரைசிங்கம் செந்தில்நாதன் (கோவை இல. B1/9/845) - அரியாலை கிழக்கு.

★ செல்லன் குலேந்திரன் (கோவை இல. B1/9/26) - அனுங்கில், சாவகச்சேரி.

★ கந்தசாமி அழகரத்தினம் (கோவை இல. B1/9/25) - அம்மன் வீதி, அனுங்கில், சாவகச்சேரி.

★ ஏ.கேருகுமான் (கோவை இல. B1/279) - இல.79 பீச் றோட், குருநகர்.

★ ஜே.குகநேசன் (கோவை இல. B1/278) - இல.20, சிவபுரம் வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ்.மகேஸ்வரன்(கோவை இல. B1/9/119) - 2ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.

★ ஆர்.தனரூபன்(கோவை இல. B1/361) - இல.32, கோயில் வீதி, நல்லூர்.

★ மகேந்திரன் பாபு(கோவை இல. B1/346) - இல.697, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.

★ எஸ்.தேவராஜ் (கோவை இல. B1/9/73) - இல.310, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(ஐ-4)

# நெருக்கடிகளுக்குத் தீர்வு காண விவேகிகளின் அறிவுரையை ஜனாதிபதி பெறவேண்டும்!

## கங்கொடவிலா தேரர் ஆலோசனை

கொழும்பு,ஓக.14

நாட்டின் நெருக்கடி மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவுசார் விவேகிகளிடம் ஆலோசனை பெற வேண்டும் என்று பிரபல தேரர் வண. கங்கொடவிலா சோம, அறிவுறுத்தியுள்ளார்.

சமுதாயப் பிரச்சினைகளில் அப்பட்டமாகக் கருத்துக் கூறுவதன் மூலம் தென்னிலங்கையில் பிரபலம் பெற்ற பௌத்த பிக்கு இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரி.என்.எல். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற வண. தேரர் மது குடிப்பதற்காகவே ஒன்று கூடும் நண்பர்களிடம் ஆலோசனைகளைப் பெறாமல் - செயல் நுட்ப மறிந்த - அனுபவ அறிவுசார்ந்த - அறிஞர்களிடம் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், ஜனாதிபதி பெறவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிகள் குறித்துக் கூறும்போது -

நாட்டையும், மக்களையும் பற்றிக் கவலைப்படாமல், ஜனாதிபதி தனது பதவியையும், அதிகாரத்தையும், தக்கவைத்துக்கொள்வதிலேயே குறியாக இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற உளநல நிபுணர் டாக்டர் டி.வி.ஜே. ஹரிஸ்சந்திரா கூறுகையில் -

ஆண், பெண் பேதமின்றி நாட்டின் அனைத்து அரசியல் தலைவர்களும் நாட்டைப் பற்றிய எவ்வித அக்கறையுமில்லாது செயற்படுவதாகவும் -

ஜனாதிபதி தவறான வழி நடத்தலை பின்பற்றுவதாகவும் - தெரிவித்தார்.

அரசமைப்பு மாற்றம் எந்தப் பிரச்சினையையாவது தீர்க்குமா? என்றும் அவர் சந்தேகம் எழுப்பினார்.

தலைவர்கள் தமது அலுவலகங்களை விட்டு வெளியே வந்து நாட்டில் இடம்பெறும் துயரங்களை கண்டறியவேண்டும் என்றும் டாக்டர் ஹரிஸ்சந்திரா குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, தற்போதைய நெருக்கடிகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி நல்ல ஆலோசனைகளைப் பெறத் தவறிவிட்டதாகக் கூறினார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் மக்கள் ஐக்கிய முன்னணி அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.(உ-ஒ)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.14

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை 5 மணிக்கு திருமுறை வீதிப் பஜனையும் தொடர்ந்து குருமூர்த்த ஆலயத்தில் காலை 7 மணிக்கு விசேட பூஜை, தீபாராதனை வழிபாடும் இடம் பெறும்.

தொடர்ந்து காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரையும் பி.ப. 3 மணி முதல் 4.30 மணி வரையும் 'கந்தபுராணம்' புராண படனம் இடம் பெறும். (ஐ-7)

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் தினமும் மாலை 6 மணிக்கு இடம்பெறும் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த சர்மாவின் கம்பராமாயணச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'மாயமான்' என்னும் தலைப்பில் பிரசங்கம் இடம் பெறும். (ஐ-7-86)

★ ★ ★

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6 மணிக்கு இடம்பெறும் தெய்வீக இசையரங்கில் இன்று ஸ்ரீ ரங்கராணி இராமச்சந்திரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். (ஐ-7-86-17)

★ ★ ★

அகில இலங்கைக் கம்பன் கழகம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் பெரிய புராணச் சொற்பொழிவு இடம்பெறும்.

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் தினமும் பி.ப.2 மணி முதல் நடைபெற்றுவரும் திருமுறைப் பாராயணம் சொற்பொழிவு நிகழ்வில் -

இன்று 63 நாயன்மார் குரு பூசை மண்டபத்தில் 'ஆன்மீகத்தில் அரிவையர்' என்ற தலைப்பில் எஸ். ஆனந்தராசாவின் சொற்பொழிவும் -

கிழக்கு வீதி மனோன்மணி அம்மன் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சிவராஜ சர்மாவின் கந்தபுராணச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ-7)

## பாதுகாப்புக் காரணங்களுக்காக

# கல்வயல் பகுதியில் மக்கள் குடியமர்வது இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஓக.14

தென்மராட்சியில் கல்வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் பொதுமக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் 2001.08.10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் ஜே-305 கல்வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாத்திரம் தற்போது மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இப்பிரதேசம் பாதுகாப்பற்ற பகுதி எனக் கருதப்படுவதாலேயே மீளக்குடியமர்த்தும் பணி அங்கு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மேற்குறிப்பிடப்பட்ட பிரிவில் ஜே-305 கல்வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் பணி நடைபெறாது இப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் போன்றவற்றை முழுமையாக அப்புறப்படுத்தி பாதுகாப்பான பகுதி என பூரணமாக உறுதி செய்யப்பட்ட பின்னரே அங்கு மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும் மேற்குறிப்பிடப்பட்ட பிரிவில் மீளக்குடியமரும் மக்களுக்கு 2001.08.10 ஆம் திகதி வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை நுணாவில் சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் மீண்டும் கையளிக்கும்படி கேட்டுக் கொள்வதோடு, மீளக்குடியமர அனுமதிக்கும் வரை எவரும் இப்பகுதியில் மீளக்குடியமரச் செல்லவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். அதேவேளை மீளக்குடியமர்த்தும் திட்ட நடவடிக்கையின்போது உங்களுக்கு ஏற்பட்ட அசௌரியங்களுக்கு பாதுகாப்புப் படையினராகிய நாம் கவலை தெரிவித்துக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## அடிக்கல் நடும் விழா

கோப்பாய் வடக்கு கேணியடி நாகதம்பிரான் ஆதி வைரவர் பெருமான் கோயில் அடிக்கல் நடும் விழாவும் நாள் வேலையும் கடந்த புதன் கிழமை ஆதீனகர்த்தா வை.மு.பரமசாமிக்குருமணி தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-72)

# தப்பிய கைதிகளுக்கு பகிரங்கப் பிடியாணை!

யாழ். சிறைச்சாலையில் இருந்து கடந்த 7ஆம் திகதி தப்பிய நான்கு கைதிகளின் புகைப்படங்களையும் பத்திரிகைகளில் பிரசுரித்து, அவர்களைக் கைது செய்வதற்கு பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இந்தக் கைதிகள் விவகாரம் யாழ்.பொலிஸாரால் எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

பொலிஸாரின் வேண்டுகோளின்படி தப்பியோடிய நடராசா சொர்ணலிங்கம், தவசி தவச்சந்திரன், சரவணமுத்து சிவானந்தன், செல்லத்துரை ரஞ்சன் ஆகிய நான்கு பேரினது புகைப்படங்களையும் பத்திரிகைகளில் பிரசுரிக்க நீதிவான் அனுமதியளித்தார்.

சிறைச்சாலையில் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கூட்டத்தின் வாசல் பூட்டு திறக்கப்பட்டது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டதா என்று நீதிவான் கேட்டதற்கு-

யாழ். பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டிய இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடியவர்களைக் கைது செய்ய பகிரங்கப் பிடியாணை பிறப்பித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் செப்ரம்பர் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஐ-6)

## இரு கட்ட நிவாரணம்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான இரண்டு கட்ட நிவாரணப் பொருள்கள் நேற்று திங்கட்கிழமை முதல் வழங்கப்பட்டு வருவதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-72)


## பிற்போடப்பட்டுள்ளன

எதிர்வரும் 16.08.2001 வியாழக்கிழமை நடைபெறவிருந்த

### திருமதி சிற்றம்பலம் நிர்மலா

அவர்களது சபிண்டீகரணக்கிரியைகளும் மதியபோசன நிகழ்வுகளும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் 19.08.2001 அன்று ஞாயிற்றுக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அந்தியேட்டிக் கிரியைகள் முன்னர் அறிவித்தபடி 16.08.2001 வியாழக்கிழமை அன்றே நடைபெறும்.

'சிவகிரி'
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(C/17858)

## ஆப்கனில் வெளிநாட்டவர் 8 பேருக்குச் சிறை

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தில் ஈடுபட்டமைக்காக எட்டு வெளிநாட்டவர்களுக்கு மூன்று முதல் பத்து நாள்கள்வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். சிறைத்தண்டனை பெற்றவர்களில் மூவர் அமெரிக்காவையும் நால்வர் ஜேர்மனியையும் ஒருவர் ஒஸ்ரியாவையும் சேர்ந்தவர்கள்.

இவர்கள் பல்வேறு இடங்களில் கிறிஸ்தவ சமய பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டதாக தலிபான்கள் தெரிவித்தனர். எனினும இவர்கள் அனைவரும் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# இந்தியா - அமெரிக்கா இடையே இராணுவ உறவு வலுவடைகிறது!

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு வலுத்துவருகின்றது.

அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இந்திய உயர் அதிகாரி ஒருவரும் அதனை உறுதிப்படுத்தி உள்ளார்.

கூட்டு இராணுவப் பயிற்சிகள், படைத்துறை அதிகாரிகள் பரிமாற்றம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் முக்கிய கடற்பகுதிகளுடாக அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் செல்வதற்கான அனுமதி உட்பட பல இராணுவ ரீதியான நடவடிக்கைகளில் இருநாடுகளும் இன்னும் சில மாதங்களில், தமது ஒத்துழைப்புக்களைத் தீவிரப்படுத்த உள்ளன.

இந்திய இராணுவத்தினருக்கு இராணுவக் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான 5 லட்சம் ரூபா திட்டம் ஒன்றை அமெரிக்கா தயாரித்துவருகிறது.

எனினும் இத்தகைய இராணுவ ஒத்துழைப்புக்களில் இரு தரப்பும் ஈடுபடுவதற்கு முன்னர் இந்தியா மீது அமெரிக்க விதித்துள்ள தடை முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோடைகால விடுமுறை முடிந்து நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது இந்தியா மீதான தடைகளை அகற்றும் பணியில் புஷ் அரசாங்கம் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.(ம-9)

## தீக்குளிக்க தூண்டியதாக மூவர் கைது!

புதுடில்லி,ஓக.14

இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் முறைசாராக் கல்வி ஆசிரியர் சங்கத்தினர் கடந்த வாரம் நடத்திய தீக்குளிப்புப் போராட்டத்தையடுத்து, தற்கொலை செய்யத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் மேற்படி சங்கத் தலைவரும், இரு ஆசிரியைகளும் கைது செய்யப்பட்டனர். இந்தப் போராட்டத்தின் போது ஆசிரியர்கள் தீக்குளிக்க முயன்றபோது, பொலீஸார் தடுத்துவிட்டதால் எவருக்கும் தீக்காயங்கள் ஏற்படவில்லை.

உலக அரங்கில்

## அ.தி.மு.க. ஆட்சியை கலைக்கும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை

புதுடில்லி,ஓக.14

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப் படுத்தும் எண்ணம் எதுவும் மத்திய அரசுக்குக் கிடையாது என்று மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று முன்தினம் சென்னையில் தெரிவித்தார். (ஒ)

### தமிழகத்தில் நேற்றுமுன்தினம் சம்பவம்

# தி.மு.க. பேரணியின்போது கலவரம்!

# பொலீஸார் சுட்டு ஐவர் உயிரிழப்பு!!

## நூற்றுக் கணக்கானோர் காயம்! பத்திரிகையாளர் மீதும் தாக்குதல்!

சென்னை,ஓகஸ்ட்14

**சென்னையில் நேற்றுமுன்தினம் தி.மு.கவினர் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின்போது பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 5 பேர் உயிரிழந்தனர்; நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.**

**பேரணி பற்றிய செய்தி சேகரிக்கச் சென்றிருந்த பத்திரிகையாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் பொலீஸாரால் தாக்கப்பட்டனர்.**

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதியை ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்த சமயம் பொலீஸார் அடாவடித்தனமாக நடந்து கொண்டதைக் கண்டித்து தி.மு.கவினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணி முடிவுறும் தறுவாயில் சென்னை மெரினா பீச்சிலுள்ள காந்தி சிலைக்கு முன்பாக இருக்கும் பொலீஸ் ஆணையாளர் அலுவலகத்துக்கு முன்பாகவே இந்த மோதல்கள் வெடித்தன.

மோதல் எப்படி வெடித்தது என்பதோ, யார் யாரைத் தாக்கினார்கள் என்பதோ சரிவரத் தெரியவில்லை என்று அங்கிருந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். எனினும் மோதல்களுக்கு ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

மோதல்கள் ஆரம்பமானதும் பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகங்களையும் குண்டாந்தடியடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

நிலைமைகள் கட்டுக்கடங்காமல் போனதை அடுத்து பொலீஸார் இறப்பர் குண்டுகளைக் கொண்டு சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

பொலீஸார் நடத்திய தாக்குதல்களில் பத்திரிகையாளர்கள் மற்றும் புகைப்படப் பிடிப்பாளர்கள் 10 பேர் காயமடைந்தனர்.

மோதல்களின் இடையில் பொலீஸார் பத்திரிகையாளர்களை விரட்டி விரட்டித் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்பாட்டக்காரர்கள் தாக்கியதில் 32 பொலீஸார் காயமடைந்ததாக பொலீஸ் ஆணையாளர் தெரிவித்தார். ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸ் ஜீப் ஒன்றையும் மெரீனா கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பல வாகனங்களையும் தீ வைத்துக் கொளுத்தினர்.. இந்தக் கவேரங்களைத் தொடர்ந்து இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய மு.கருணாநிதி தமிழக அரசின் அராஜகப் போக்குக் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமிக்க வேண்டும் என்று கூறினார்.

இதற்கிடையில் -

நேற்றுமுன்தினம் சென்னையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி பக்தவற்சலம் தலைமையில் ஆணைக்குழு ஒன்றை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நியமித்துள்ளார்.(ம-9)

## தமிழக விவகாரம் நேற்று நாடாளுமன்றிலும் எதிரொலிப்பு

புதுடில்லி,ஓக.14

சென்னையில் தி.மு.கவினரின் பேரணி மீது பொலீஸார் நடத்திய தாக்குதல் நேற்று இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிரொலித்தது. இதனால் இரு அவைகளும் இன்றுவரை ஒத்திப்போடப்பட்டன.

நாடாளுமன்றின் மக்களவை நேற்றுக் காலை ஆரம்பமானதும் அவையின் மத்திய பகுதிக்கு வந்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தில பொலீஸார் நடந்துகொண்ட முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோஷங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து அவையின் மத்திய பகுதிக்கு வந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க.வினருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

அவைத் தலைவர் பாலயோகி இரு தரப்பையும் அமைதியாகுமாறு கேட்டுக் கொண்டார். எனினும் இரு தரப்பும் தொடர்ந்து வாக்குவாதங்களில் ஈடுபட்டது. இதனால் அவையை பகல் 12 மணி வரைக்கும் அவைத் தலைவர் ஒத்தி வைத்தார். பின்னர் அவை மீண்டும் கூடிய போதும் இரு தரப்பினரும் வாக்குவாதத்தில் இறங்கியதால் அவையை இன்றுவரை ஒத்தி வைப்பதாக பாலயோகி அறிவித்தார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து தமிழக விவகாரத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தி.மு.கவினர் குரல் எழுப்பினர். இதனால் அங்கும் அமளிதுமளி ஏற்பட்டது.

இதனை அடுத்து அவைத் தலைவர் கிருஷ்ணகாந்த் அவையை முதலில் நண்பகல் 12 மணி வரையும் பின்னர் இன்று வரையும் ஒத்தி வைத்தார். (ம)

### வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர

## பலஸ்தீனர்களுடன் பேச்சு நடத்த அமைச்சர் பெரஸுக்கு அனுமதி

### பிரதமர் ஷெரோன் வழங்கினார்

ஜெருசலேம்,ஓக.14

கடந்த பத்து மாதங்களாகத் தொடர்ந்துவரும் மத்தியகிழக்கு மோதல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கென பலஸ்தீனர்களுடன் பேசுவதற்கு இஸ்ரேலிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஷிமோன் பெரஸுக்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அனுமதி அளித்துள்ளார்.

எனினும் தற்போதைய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றியே பேசவேண்டும் என்றும், அதுவும் இஸ்ரேலிய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் சகிதமே பேச்சில் பங்குபற்றவேண்டும் என்றும் ஷிமோன் பெரஸுக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படும் வரை அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்கு இடமில்லை என்றும் -

எனவே அரசியல் தீர்வு குறித்து பெரஸ் பலஸ்தீனர்களுடன் எதுவும் பேசக்கூடாது என்றும் -

இஸ்ரேல் பிரதமர் ஷெரோன் தெரிவித்தார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

பலஸ்தீனர்களுடன் பேசுவது என்ற இந்த முடிவு அண்மையில் மத்திய ஜெருசலேத்தில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு முன்பே எடுக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஆதரவுடன் அமைதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இடதுசாரித் தலைவரான ஷிமோன் பெரஸ் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தார். அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டே பிரதமர் ஷெரோன் பலஸ்தீனர்களுடன் பேச அவருக்கு அனுமதி அளித்துள்ளார் - என்றார். (ம)

## 'ஓரியண்ட் ஹவுஸை' விட்டு வெளியேறினாலேயே பேச்சு

### யஸீர் அரபாத் தெரிவிப்பு

ஜெருசலேம்,ஓக.14.

கிழக்கு ஜெருசலேத்தில் உள்ள பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைமையகமான 'ஓரியண்ட் ஹவுஸில்' இருந்து இஸ்ரேலியப் படையினர் வெளியேறினால் மட்டுமே அந்த நாட்டுடன் பேச்சு நடத்த முடியும் என்று பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தெரிவித்தார்.

இஸ்ரேலியர்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களுடன் பேசுவது சாத்தியமற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'ஓரியண்ட் ஹவுஸை' இஸ்ரேலிடமிருந்து மீட்டுத் தருமாறு உலக நாடுகளிடமும் அரபாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை -

இஸ்ரேலின் வடபகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 15 இஸ்ரேலியர்கள் காயமடைந்தனர். தாக்குதல் நடத்தியவர் பலியானார். (ம)



ரஷ்யாவின் அணு நீர்மூழ்கிக் கப்பலான 'குர்ஷக' கடந்த ஆண்டு யுத்தப் பயிற்சி நடவடிக்கையின் போது விபத்து ஏற்பட்டு கடலில் மூழ்கியது. அதிலிருந்த 118 பேரும் மரணமாகினர். நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதன் ஓராண்டு நினைவு தினம் ரஷ்யாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் அஞ்சலி செலுத்த வந்தபோது தேம்பித் தேம்பி அழுவதையும், நீர்மூழ்கி கடலில் மூழ்கிய இடத்தில் ரஷ்யக் கடற்படைப் படகு ஒன்று மலர்வளையங்களை இட்டு அஞ்சலி செலுத்துவதையும் சென் பீற்றர்ஸ் பேர்க்கில் உயிரிழந்த தமது சகபாடிகளுக்கு ரஷ்ய கடற்படை வீரர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# முகாமைத்துவ மாணவருக்கு பயிற்சிகள் செப்ரெம்பரில்

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட புகுமுக மாணவர்களுக்கான ஆரம்ப பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றன.

இந்த வருடம் முகாமைத்துவ கற்கைகளுக்கு 91 மாணவர்களும், வணிகமாணி கற்கை நெறிக்கு 63 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான ஆரம்பப் பயிற்சி வகுப்புகள் ஒரு மாத காலம் வரை நடைபெறும் என்றும் —

விரிவுரை வகுப்புகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் —

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி என். நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

இதேவேளை —

புதிய கல்வி ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் தமது பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறும் —

பதிவு செய்யத் தவறுபவர்களின் பெயர் விவரம் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் இடத்துக்கு வெற்றிடம் நிரப்பு பட்டியல் மூலம் வேறு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் — யாழ். பல்கலைக்கழக அனுமதிகளும் பரீட்சைகளும் கிளையின் உதவிப் பதிவாளர் தெரிவித்தார். (ஐ–6)

# உலக வங்கிக்குழு வழுக்கையாறு விஜயம்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை வழுக்கையாறு மற்றும் அராலிப் பகுதியில் உள்ள உவர் நீர்த்தடுப்பணை ஆகியவற்றைப் பார்வையிடவுள்ளனர்.

இக்குழுவினருடன் கமநல அபிவிருத்தித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் செல்லவுள்ளனர். (ஐ-10)

# இளைஞனை காணோம்

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குகரவெட்டி, துன்னாலை மற்கைச் சேர்ந்த கண்ணன் பாஸ்கரன் (வயது 22) என்பவரே காணாமற்போனவராவார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் இவரைக் காணவில்லை என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# கப்பலில் வெங்காயம்!

ஒரு தொகுதி யாழ்ப்பாணத்து வெங்காயத்துடன் 'ஹெந்தல' கப்பல் பருத்தித்துறையில் இருந்து இன்று செவ்வாய்க்கிழமை திருகோணமலைக்கு புறப்பட்டுச் செல்கிறது. (க–173)

# சமய சந்நிதிகளில்

இருபாலை கிழக்கு அருள்மிகு லிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

யாழ். புனித மரியன்னை ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழா செபமாலையுடன் நடைபெறும்.

நாளை புதன்கிழமை திருவிழாத் திருப்பலிகள் இடம்பெறும். முதலாம் திருப்பலி காலை 6.00 மணிக்கும் திருநாள் திருப்பலி காலை 7.15 மணிக்கும் இடம்பெறும். திருவிழாத் திருப்பலி யாழ். ஆயரால் ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 5.30 மணிக்கு மரியன்னையின் தேர்ப்பவணியும் திருச்சொரூப ஆசிரும் இடம்பெறும். (ஐ-51)

★ ★ ★

ஏழாலை கிழக்கு களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான லட்சார்ச்சனைப் பெருவிழா நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (க4–)

★ ★ ★

நாவாந்துறை புனித பரலோகமாதா தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 6 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபபவனி, திருச்சொரூப ஆசீர் என்பனவும் இடம்பெறும். (க)

★ ★ ★

மல்லாகம் பழம்பதி திருமுருகன் கருமாரி ஆலயத்திற்கு சிற்பக் கலாமணி சரவணமுத்து ஜெயகாந்தன் குடும்பத்தினரால் 15 லட்சம் ரூபா செலவில் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ–86)

★ ★ ★

இளவாலை சித்திரமேழி ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின நவோத்தர சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7 மணி முதல் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக மலர் வெளியீடு திருவூஞ்சல்ஆகியன தொடர்ந்து இடம்பெறும்.

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் சந்நிதியில் எழுந்தருளி மூர்த்தியாக எழுந்தருளவுள்ள ஸ்ரீ தேவி பூமிதேவி பிரம்மதேவர் சமேத ரங்கநாதப் பெருமானின் 'கிராமப் பிரதட்சணம்' நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

மூளாய் வதிரன் புலோ சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்து நாளை பிற்பகல் 2 மணிக்கு கிராமபிரதட்சணமாக எழுந்தருளி மூர்த்தி தேவஸ்தானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (ஐ–15)

★ ★ ★

இன்று ஆடி மாதக் கடைசி செவ்வாய்க்கிழமை ஆகும் இதனை ஒட்டி சகல அம்மன் ஆலயங்களிலும் விசேட அபிஷேக அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்று, சுவாமி வீதியுலா வருதலும் நடைபெறும். வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் விசேட பொங்கல் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா நடைபெறும். சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயங்களிலும் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இன்று மாலை சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்தில் விசேட கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

★ ★ ★

சுன்னாகம் தெற்கு அருள்மிகு சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பத்துத் தினங்கள் நடைபெறும் உற்சவத்தின் இறுதி நாளன்று சங்காபிஷேகமும், மகேஸ்வர பூஜையும், திருவூஞ்சலும் இடம்பெறும்.

உற்சவ காலத்தில் சிவத்திரு. வ. குமாரசாமிஐயர் 'மகாபாரதம்' என்னும் பொருளில் தொடர் சொற்பொழிவாற்றுவார்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வி வலய முதன்மை ஆசிரியர்

திரு.நா. சுவாமிநாதன்

அவர்களது அன்புத் தாயார்

### திருமதி நாராயணபிள்ளை கண்ணகைப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கோப்பாய் கந்தவேள் த. க. பா.

(91201)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 14 - 08 - 2001 — 22 - 08 - 2001

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 23 - 08 - 2001 — நண்பகல் 12 மணி

கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி:- 24 08 - 2001 — பிற்பகல் 2 மணி

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக்கட்டணம் (ஜி. எஸ். ரி. உட்பட) |
|---|---|---|
| பிரதேச சபை தலைமை அலுவலக கூரை வேலை திருத்தம் | 12475.00 | 281.25 |
| கலைவாணி சனசமூக நிலைய குழாய்க்கிணறு அமைத்தல் | 250.00 | 168.75 |
| சிவன் முன்பள்ளி குழாய்க்கிணறு அமைத்தல் | 250.00 | 168.75 |
| கலாஜோதி சனசமூக நிலைய குழாய்க்கிணறு திருத்தம் | 150.00 | 112.50 |
| மாநாட்டு மண்டப மேசையின் கண்ணாடியின் கீழ் தூசு புகுவதைத் தடுத்து, வெல்வெற் துணிபோடுதல் | 125.00 | 112.50 |
| மல்வம் கொல்களம் திருத்தவேலை செய்தல் | 125.00 | 112.50 |

**ஏலவிற்பனை:**

கோண இரும்புகள் — 21 எண்
உருக்கிணைக்கப்பட்டது — 33 எண்
ஜி. ஜி. கூரைத்தகடு (பாவிக்கப்பட்டது) — 49 எண்

ஏலவிற்பனைத் திகதி 20-08-2001, காலை 10.00 மணி
(அலுவலக நேரத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்)

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப்பிரதியை, "தலைவர், வலிகாமம் தெற்கு, பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: "இக்ராட்" நிறுவனத்தில் பதிவு செய்தவர்களுக்கும் மற்றும் திணைக்களங்களில் பதிவு செய்தவர்களுக்கும் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

க. கமலசேகரம் ஜே.பி.யு.எம்.
தலைவர்.

வலி. தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
13-08-2001

(சி/17 852)

## ஈவினை மத்தி கற்பக விநாயகர் ஆலய சைவபரிபாலன சபை

# புதிய நிர்வாகசபை தெரிவு - 2001

மேற்படி தெரிவு தர்மகர்த்தா திரு. ச. இராசலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர்: திரு. ச. இரத்தினலிங்கம், செயலாளர்: திரு. பொ. கிருஷ்ணதாசன், பொருளாளர்: திரு. ப. நகுலேஸ்வரன், உபதலைவர்: திரு. இ. நவரத்தினம், உபசெயலாளர்: திரு. ஐ. தம்பிராசா இவர்கள் உட்பட 21 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆலய பிரதமகுரு சிவஸ்ரீதியாக கெங்காதரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

ச. இரத்தினலிங்கம் (தலைவர்)
பொ. கிருஷ்ணதாசன் (செயலாளர்)

(91205)

## விசேட பொதுக் கூட்டம்

# கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்

லங்கா சிமெந்து சகல தொழிலாளர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் இன்று (14 - 08 - 2001) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் சுயவிருப்பு ஒய்வூதியத் திட்டம் சம்பந்தமாக சில முக்கிய தீர்மானங்கள் எடுக்க இருப்பதால் சகல தொழிலாளர்களும் தவறாது சமுகம் தரவும்.

முக்கிய விடயம்:- சகல செயற்குழு அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

—செயலாளர்.

(சி/17849)

உதயன்

## அச்சுறுத்தல்!

தமிழகத்தில் மீண்டும் ஒரு தடவை யுத்தக்களறி ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் மோதல் இரத்தக் களறியில் முடியும் ஒரு புதிய கலாசாரம் தமிழகத்தில் வேரூன்றி வருவதை இச்சம்பவம் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

கலைஞர் கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்கள் முரசொலிமாறன், ரி.ஆர்.பாலு ஆகியோரைக் கைதுசெய்த போது காட்டிய அதே வன்மப்போக்கை - கைவரிசையை - அந்தக் கைது நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் சென்னையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியிலும் தமிழகப் பொலீஸார் காட்டியிருக்கின்றார்கள். இதனால் ஐந்து பேர் உயிரிழந்திருக்கின்றனர்; நூறு பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளனர்.

கருணாநிதி மற்றும் இரு மத்திய அமைச்சர்கள் கைதானதை ஒட்டித் தாம் தெரிவித்த நொண்டிச்சாட்டுக்களை - காரணங்களை - சென்னைப் பொலீஸார் இப்போதும் கூறமுற்படுவர் என்பது திண்ணம்.

அரசியல் தலைமைத்துவங்களின் ஏவல் ஆள்களாகப் பொலீஸ் தலைமைத்துவம் செயற்படும்வரை இத்தகைய அனர்த்தங்களை - விபரீதங்களை - தவிர்க்க முடியாது.

பொலீஸ் தரப்பில் என்ன காரணம் கூறமுற்பட்டாலும், மீண்டும் ஒரு தடவை தமிழகச் செய்தியாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட பொலீஸ் அராஜகத்துக்கு எந்தச் சமாதானமும் ஏற்றுக்கொள்ளப்படப்போவதில்லை என்பது நிச்சயம்.

இந்த அரசியல்வாதிகளின் மோதலில் - கலவரத்தில் - முதல் இலக்காகுபவர்கள் செய்தியாளர்கள்தான என்பது தமிழகத்தில் மட்டுமல்ல இலங்கையிலும் கனகச்சிதமாய்ப் பொருந்துவதாகத்தான் உள்ளது.

கருணாநிதி கைதை ஒட்டியும் சரி நேற்றுமுன்தினம் சென்னையில் களேபரத்தில் முடிவுற்ற கண்டனப் பேரணியிலும் சரி செய்தியாளர்களை இலக்கு வைத்துப் பொலீஸார் தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள் என்பது அப்பட்டமாகத் - தெளிவாகத் - தெரிகின்றது.

பொதுமக்கள் மீது பொலீஸார் நடத்திய அராஜகத் தாக்குதலை அப்படியே படம் பிடித்ததைத் தவிர, செய்தியாளர்கள், பத்திரிகைப் புகைபடப் பிடிப்பாளர்கள் தாக்கப்பட்டதற்கு வேறு முகாந்திரம் இல்லை.

பொலீஸ் அத்துமீறல்களை அம்பலப்படுத்தும் குற்றத்துக்காகவும் -

ஜெயலலிதா அரசின் சட்டவிரோதச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறும் தவறுக்காகவும் -

தமிழகச் செய்தியாளர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள்-வன்முறை வழியில். இது கண்டிக்கத்தக்கது.

இதே நிலைமைதான் இங்கு இலங்கையிலும். ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக்காலத்தில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நிலைமையை நோக்க நாம் நகர்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதுதான் அச்சம்தரும் உண்மை.

அரசபடைகளால், ஆயுதக் குழுக்களால், ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சிகளால் மட்டுமல்ல; ஜனநாயகம் பேசும் எதிர்க்கட்சிகளால் கூட செய்தியாளர்கள் மிரட்டப்படுவதாகத் தகவல் வெளியாவது செய்தியாளர்களை பீதியில் ஆழ்த்துவதாக உள்ளது.

பத்திரிகையாளர் மனோரஞ்சனும் 'த சன்டே லீடர்' பத்திரிகையாளர் ஒருவரும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளால் மிரட்டப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருப்பது நம்ப முடியாததாக உள்ளது.

'உதயன்' அலுவலகம் மீதான குண்டுத் தாக்குதல், நிமலராஜன் படுகொலை, ஐ.பீ.சீ. செய்தியாளர் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடரும் ஏதுநிலை காணப்படுகின்றது. தங்கள் அரசியல் நிலைப்பாட்டுக்கு வளைந்து கொடுக்காத பத்திரிகைகளை மூடச்செய்யப் போவதாக-நாசூக்காக மிரட்டும்-தகவல்களைப் பத்திரிகைகளுக்கு, பத்திரிகையாளர்களுக்குத் தெரிந்த வட்டாரங்கள் மூலம் கசியவிடும் பணியும் ஆரம்பமாகியிருக்கிறது.

சட்டவிரோதமான முறையில் 45 நாள்கள் 'உதயன்' சீல் வைத்து மூடப்பட்டிருந்த சமயம், பத்திரிகைச் சுதந்திரத்திற்காகக் குரல் எழுப்பவேண்டிய - சட்டமியற்றும் சபையின் உறுப்பினர்கள் - மௌனம் பேணி, பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஆப்புவைத்த செயலை அங்கீகரித்ததும் இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆயுத வன்முறை மற்றும் பத்திரிகையாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மூலம் ரிச்சாட் டி. சொய்ஸா, நிமலராஜன் போன்ற தனித்தனிப் பத்திரிகையாளர்களின் வாயை-எழுத்தை-இருப்பை - மூடவோ, இல்லாமலோ செய்யலாம். ஆனால் அதன் மூலம் மக்களின் குரலை - எழுத்துச் சுதந்திரத்தை - அடக்கிவிடலாம் என்று நினைப்பது மூடத்தனம் என்பதை சம்பந்தப்பட்டோர் உணரவேண்டும்.

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சட்ட உதவி கிடைக்கும்

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.14

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இலவச சட்ட உதவிகளை ஏற்படுத்திக் கொடுக்க பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

குடாநாட்டு சட்டத்தரணிகளின் ஆதரவுடன் இந்த மாதத்தில் இருந்து எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை இந்த இலவச சட்ட உதவிகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 2லட்சத்து 20ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கி யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தின் ஊடாக இந்த இலவச சட்ட ஆலோசனைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சட்ட ஆலோசனை பெற விரும்புபவர்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பின் அது தொடர்பான பிரச்சினைகளுக்கு சட்ட ஆலோசனையை பெற்றுக்கொண்டு மேலதிக நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க ஆவன செய்யப்படும்.

குற்றச் செயல்கள் மற்றும் சொந்தப் பிரச்சினைகளான காணிப் பிரச்சினை, எல்லைப்பிரச்சினை போன்றவை தொடர்பான வழக்குகளுக்கு இந்தச் சேவையில் உதவி பெற முடியாது என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

போரின் நடுவில் சிக்கிக் காணாமல் போனதாகக் கூறப்படும் நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகளின் நிலைமையை அறிய விரும்பும் பெற்றோருக்கு இந்த இலவச சட்ட ஆலோசனைகள் பயனளிக்குமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு -

இது தொடர்பாக தாம் ஆலோசித்துவருவதாகவும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள சட்டத்தரணிகளின் சேவைகளைப் பெற்று அவர்களின் ஆலோசனைகளுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கும் அமைப்புக்களுக்கூடாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து வாழும் பொதுமக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெற்று நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய இத்திட்டம் பெருமளவில் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இலவச சட்ட ஆலோசனைத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்துவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் துரித கதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-6)

## நாட்டு நடப்பு

### நல்லைத் திருப்பள்ளி எழுச்சி

போற்றி எம்மவரை வாழ்விக்கும் பொருளே
புலர்ந்தது மற்றுமோர் பொல்லாத பொழுது!
கூற்றினை ஒத்த கொடிய செல் வீச்சால்
குளறித் துடித் தலறுகின்றார்கள்
நாற்புறம் குண்டுகள் நலிவுற வீழும்
நலம் திகழ் நல்லூர் நலமுறு வேலா
ஆற்றொணாத் துயரால் ஆழுதழுது தொழுதோம்
ஆறுமுகனே பள்ளி எழுந்தருளாயே!

- *விகடகவி.*

### கல்விப் பணிப்பாளர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா. தணிகாசலம்பிள்ளை மற்றும் வலயங்களின் கணக்காளர்கள் பொறியியலாளர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-10)

### 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.14

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வருடந்தோறும் வெளியிடப்படுகின்ற 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடு நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு ஆலயச் சூழலில் அமைந்துள்ள துர்க்கா தேவி மணிமண்டபத்தில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கடந்த 93 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த மலர் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ10)

### நாளை

ஆடி 30
புதன்கிழமை
திதி: ஏகாதசி
மாலை 5.52 வரை
நட்சத்திரம் :மிருகசீரிடம்
முற்பகல் 11.16 வரை.
சுபநேரம் : 4.35 - 6.05
ராகுகாலம் : 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

# எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒத்திவைக்கமுடியாது ஜனாதிபதி நிர்ணயித்த திகதியிலேயே சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்

## விநாயகமூர்த்தி எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பணாம்,ஓக.14

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்திவைக்க முடியாது. சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலேயே சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி முடிக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி. கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா மக்கள் மத்தியில் தனது செல்வாக்கு எந்தளவுக்கு உண்டு என்பதைப் பார்ப்பதற்கே திடீரென சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத் திட்டமிட்டார். அதிலும் தாம் தோற்றுப்போவது நிச்சயம் என்பது உறுதியாகிவிட்டதால் தற்போது சட்டத்துக்கு முரணான முறையில் சர்வஜன வாக்கெடுப்பையே ஒத்திவைத்துள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்த அரசில் நம்பிக்கை இல்லாமற் போனது ஒரு மாதத்துக்கு முன்புதான். எமக்கு இந்த அரசாங்கத்தின் மீது என்றுமே நம்பிக்கை ஏற்பட்டதில்லை.

### நாடகம் ஆடுகிறார் சந்திரிகா

தமிழர்களின் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் இந்த அரசாங்கம் ஒரு போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. அதேசமயம் -

சமாதானத்தில் தமக்கு ஆர்வம் இருப்பதாக வெளிநாடுகளை நம்ப வைத்து - நாடகம் ஆடி - கடன் உதவிகளைப் பெற்று யுத்தத்தை தொடர்ந்து வருகிறார் சந்திரிகா அம்மையார்.

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற கரிசனை இருந்தால் அவர்களுக்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

புலிகளுடன் பேசத்தயார் என்று கூறிக்கொண்டு மறுபக்கத்தில் தமிழன் என்று கூறிக்கொள்ளும் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை வெளிநாடுகளுக்கு அனுப்பி புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று பிரசாரம் செய்து வருகிறார் சந்திரிகா.

இதனால்தான் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நாம் ஆதரவு வழங்க முன்வந்தோம். இதன் பிரதிபலிப்பாகவே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நம்பிக்கை இல்லாப் பிரேரணையை இந்த அரசுக்கு எதிராக கொண்டுவந்தபோது நாம் ஆதரவு வழங்கினோம்.

### டக்ளஸின் பிரசாரம்

இதேவேளை -

ஜனாதிபதியால் நடத்தத் திட்டமிட்ட சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாக வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரசாரத்தை ஆரம்பித்திருந்தார்.

டக்ளஸிடம் நான் கேட்கின்றேன் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் என்ற வகையில் வட பகுதியில் யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் ஏதாவது அவரிடம் இருக்கிறதா?

கொழும்பில் உள்ள சேரிவாழ் மக்களின் வீடுகளை அப்புறப்படுத்த நஷ்டஈடாக லட்சக்கணக்கில் கொடுக்கப்படுகிறது. வட பகுதியில் யுத்தத்தால் அழிந்துபோய்க் கிடக்கும் பெறுமதிமிக்க வீடுகளின் புனரமைப்பு நிதிக்காக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா கொடுக்கப்படுகிறது.

இந்த நிதியைப் பயன்படுத்தி அழிந்துபோய்க் கிடக்கும் அவர்களின் வளவுகளைக்கூட துப்புரவு செய்ய முடியாது. புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் இதற்கு பதில் தரட்டும்.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த பொதுமக்களை மீளக் குடியமருமாறு வற்புறுத்தி வருகின்றார் அமைச்சர் டக்ளஸ். ஆனால் வலிகாமத்தில் இருந்து 'இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரத் தயாராக உள்ள போதிலும் அவர்களை மீளக் குடியமர்த்த எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இதேவேளை மயிலிட்டி, பலாலி போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களை மீளக் குடியமர்த்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நடவடிக்கை எடுத்தால் அதனை வரவேற்கலாம்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையை நான் நேரில் சென்று பார்வையிட்டேன். அதில் எதுவித சேதமும் இல்லை. இந்நிலையில் இந்த வைத்தியசாலையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்கிறாராம் அமைச்சர்.

### ஆலய புனரமைப்பால் பயன் என்ன?

இதனைவிட வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், பொது மக்களே செல்லமுடியாத, பிரதேசமான மத வழிபாடுகள் நடைபெறாத பகுதியான மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கும் புனரமைப்பு அமைச்சர் புனர்நிர்மாண வேலைகளுக்காக நிதி ஒதுக்கியுள்ளாராம்.

அந்தப் பகுதியிலுள்ள தமது சொந்த வீடுகளுக்கே போக முடியாது மக்கள் திணறும்போது புனரமைக்கப்படும் ஆலயங்களுக்கு வழிபாட்டுக்கு யார் போகப் போகின்றார்கள்?

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் புலிகளுடன் பேசிச் சமாதானத்தை ஏற்படுத்தும் வரை எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எமது கட்சி எதிர்த்தரப்பு ஆசனத்திலேயே அமரும்.

இதேவேளை தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சர்வஜன வாக்கெடுப்பு மீண்டும் நடத்தப்படும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் -

புலிகளை அழிக்க ஆணை கேட்கும் ஜனாதிபதிக்கு எதிராக பானைக்கு நேரே புள்ளடியிட்டு சர்வஜன வாக்கெடுப்பைத் தோற்கடிக்க வேண்டும் என்று கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (க-6)

### தடுப்புமுகாமுக்கு அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.14

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா நாளை காங்கேசன் துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் கடிதங்கள் மற்றும் பொருள்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (ஐ-10)

### உதயவாக்கு

உன் தேவைகளைக் குறைத்துக்கொள். இயலாவிட்டால் சரிசெய்து கொள். தேவையில்லாததைத் தேடித் திரியாதே!


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

"நான் இருக்குமிடம் தேடிவந்து
உன் ஒருகாலை வைப்புச் செய்தால்
உனக்கு ஓர் ஊன்றுகோல் இலவசம்!"



# தென்மராட்சியின் பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு வெற்றிடங்கள்

தென்மராட்சி,ஒக.14

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 9 பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளை நிரப்புவதற்கு வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வலயக்கல்வி அலுவலகம் கோரியுள்ளது.

தரம் II ஐச் சேர்ந்த 6 பாடசாலைகளிலும், தரம் III ஐச் சேர்ந்த 3 பாடசாலைகளிலும் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

தரம் II ஐச் சேர்ந்த கொடிகாமம் அ.த.க.பாடசாலை, மிருசுவில் அ.த.க.பாடசாலை, அல்லாரை அ.த.க பாடசாலை, சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திரமௌலச வித்தியாலயம், நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை ஆகியவற்றிலும் -

தரம் III ஐச் சேர்ந்த சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம், முகமாலை அ.த.க.பாடசாலை ஆகியவற்றிலும் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவைத் தரங்களில் உள்ளவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2:1உம் அதற்கு மேற்பட்ட ஆசிரியர் சேவைத் தரங்களைக் கொண்ட பட்டதாரிகளும்-

தரம் III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவைத் தரங்களில் உள்ளவர்களும், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2:1க்கு மேற்பட்ட தரங்களைக் கொண்ட பட்டதாரிகளும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியும்.

வலய அலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து பாடசாலை அதிபர், கோட்டக்கல்வி அலுவலர் ஊடாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வலய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-117)


## 31ஆம் நாள் நினைவு ஆராதனை அழைப்பு

### அமரர் J.C.சாமுவேல்

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

**கடந்த 16-07-2001 அன்று கனடாவில் காலமான எமது அன்புச் சகோதரர் J.C.சாமுவேல் அவர்களின் நினைவு ஆராதனை நாளை (15-08-2001) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருமதி செல்வராணி இராஜேந்திரம்
(சகோதரி)
A.இராஜேந்திரம் (மைத்துனர்)
(ஓய்வு பெற்ற சிறைச்சாலை மேற்பார்வையாளர்)

*"றூபி இல்லம்"*
*உடுவில்.*

(91130)



## உயர்தர தொழில்நுட்ப நிறுவனம்

யாழ்ப்பாணம்

தொலைக்காட்சி, வானொலி மற்றும் உபகரணங்கள் உருக்கு அலுமாரி வழங்கலுக்கான கூறுவிலை கோரல்

மேற்படி எமது நிறுவனத்துக்கு பின்வருவனவற்றை வழங்குவதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. தொலைக்காட்சி(Sony T.V21"colour model G21 Q 23) -01 எண்
2. வீடியோ டெக்(Sony Video deck Ed 25) -01 எண்
3. வானொலி(Radio Panasonic 2 in 1 model R x 6et 880)-01 எண்
4. அம்பிளிபயர்(Amplifier Aheya 80W) -01 எண்
5. ஸ்பீக்கர் பொக்ஸ்(Speaker Box 200W) -02 எண்
6. ஒலிவாங்கி(Mic Aheya Aud 99) -02 எண்
7. ஒலிவாங்கி நிறுத்தி(Mic Stand DGN) -02 எண்
8. வீடியோ கசற்(Video cassette Panasonic HD) -50 எண்
9. ஓடியோ கசற்(Audio cassette UR 60 MaxII) -50 எண்
10. பிளக் சொக்கற்(Plugs & Sockets 5 Amp) -03 எண்
11. வயர்(Wire - 104) -01 சுருள்
12. றோல் பிளக்(Roll Plugs) -02 எண்
13. உருக்கு அலுமாரி(Steel Almirah with 4 Deeks 2Drawers 1M 82cm X 90cm X 46cm) -01 எண்

கூறுவிலைகள் யாவும் 'பணிப்பாளர் உயர்தர தொழில் நுட்ப நிறுவனம், 78 பலாலி வீதி, திருநெல்வேலி' என முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கவரிலிட்டு 28-08-2001 அன்று பி.ப 2.00 மணிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாமோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கவரின் இடதுபக்க மேல் மூலையில் "தொலைக்காட்சி வானொலி கூறுவிலை" எனக் குறிப் பிடல் வேண்டும். கூறுவிலைகள் யாவும் அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு நிறுவனப் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கூறுவிலைகள் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

த.இராஜரட்ணம்,
பணிப்பாளர், உயர்தர தொழில் நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(C17788)



## முதலாம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்

மலர்வு 06 - 07 - 1930 | உதிர்வு 24 - 08 - 2000



மலர்வு 18 - 12 - 1977 | உதிர்வு 04 - 03 - 2000



அமரர்
**வல்லிபுரம் தியாகராஜா**
*(ஓய்வுபெற்ற அதிபர், சாவகச்சேரி)*
நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டவர்

தந்தையும் தாயும் மகனை இழந்து
தவிக்கும் வேளையில் -
இடம்பெயர்வினால் வீட்டை விட்டு வெளியேறி
நாவற்குழியில் கணவனை இழந்து தாய்
துயர்வுற்றிருக்கின்றாள். கண்கண்ட கண
வனையும் மைந்தனையும் இழந்து தனி
மரமாய்த் தவிக்கும் நான் என்று உங்களோடு
சேருவேன்? ஆண்டு ஒன்று கடந்தாலும்
உங்கள் நினைவோடுதான் இப் பூமியல்
நான் வாழ்கின்றேன். *(ரதி லீலாவதி - மனைவி)*

அமரர்
**தியாகராஜா அன்பகிலன்**
(அன்பு)

வெளிச்சம் தரவந்த சூரியனே - எமை
இருளில் அழவைத்து மறைந்ததென்ன?
மனம் தொழும் காவிய நாயகனே! எம்
மனங்களில் ஓவியம் ஆனவனே!
அன்பு என்னும் எம் நினைவில் வாழும்
பூமியின் புதல்வனே உறங்குகிறாயா?
உன் பூவிழி திறந்து உன் அம்மாவைப் பாராயா?
கனவிலும் உன்னைத் தேடுகின்றோமே!
கண்ணீரில் கவிதைகள் பாடிநின்றோமே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நிரந்தர முகவரி:
*"ரதி இல்லம்"*
*(வைத்தியசாலைக்கு முன்பாக, சாவகச்சேரி))*

தற்காலிக முகவரி:
*11/2.புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

உங்களை இழந்து தவித்து நிற்கும
- ரதி லீலாவதி
(மனைவி, தாய்)

(91162)



## நினைவில் நீங்கா ஓராண்டு



அன்னை மடியில் 03-11-1970 | ஆண்டவன் அடியில் 14-08-2000

### யசோதா துரைசிங்கம்

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டு ஒன்றானதே யசோ!
உங்கள் அன்பும், பண்பும், பாசமும், பரிவும்
எங்கள் நெஞ்சை விட்டுப் பிரியவில்லை!
உமது ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீரப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்!

*இந்துக்கல்லூரி வீதி,*
*பண்டத்தரிப்பு.*

பிரிவுத் துயரில் வாடும,
பப்பா குடும்பத்தினர்,
பெறாமக்கள்.

(91161)



## நெஞ்சிலிருந்து நீங்காத நினைவஞ்சலி

24ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர் முருகேசு சண்முகம்
(மலாயன் பென்சனியர்)

திருமதி அழகம்மா சண்முகம்

| | | |
|---|---|---|
| 1899-07-11 | தோற்றம் | 1917-08-16 |
| 1977-07-28 | மறைவு | 2000-07-26 |

திதி:- தசமி 14-08-2001

பாசத்தின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
எமையெல்லாம் பெற்றெடுத்து அரவணைத்துப்
பெருமை தேடித்தந்த எமது முன்னறி தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ச.பத்மநாதன்
*காளிகோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(91071)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தை அண்டிய வீதிகள் அனைத்திலும் சோதனை நிலையங்கள்!

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

கட்டுநாயக்கா விமான நிலையத்தை அண்டிய அனைத்து வீதிகளிலும் மேலதிக சோதனை நிலையங்கள் பல அமைக்கப்பட்டு விமான நிலையத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலை அடுத்து தற்போது இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கப்பட்டு வருவதுடன் முந்தைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையம் செல்லும் அனைத்து வாகனங்களும், இலத்திரனியல் கருவிகள் மூலமும் பல சோதனை நிலையங்களில் சோதனையிடப்படவுள்ளதாகவும் விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதைவிட விமான நிலையப் பாதுகாப்பு வேலிக்கு உள்ளே புதிதாக இலத்திரனியல் வேலி ஒன்றை அமைக்கவும் நெருக்கமான கண்காணிப்புத் தொலைக்காட்சி 'கமரா'க்களைப் பொருத்தவும் 'எக்ஸ்-றே' மூலம் பொருள்களைச் சோதனையிடவும நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஜப்பான் நிதியுதவி

புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நிதியுதவி வழங்கவுள்ளது.

இதற்காக 12 பில்லியன் யென்னை வழங்கவுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையம், சர்வதேச விமானங்கள் வந்து செல்லக்கூடிய அளவுக்குப் பாகாப்பானது என்பதை உறுதிப்படுத்துமளவுக்கு இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் - இதற்குப் பல ஆயிரம் கோடி ரூபாக்களைச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம், விமான நிலையத்தில் தீயணைப்பு வாகனங்களின் எண்ணிக்கையும், மிக வேகமாகச் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாகனங்களின் (Rapid Intervention Vehicles) எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளன.

இதற்கிடையில், கட்டுநாயக்காவில் தாக்குதல் நடைபெற்றபோது விமான நிலையததில் கடமையிலிருந்த இராணுவக் கமாண்டோப் படையினர் உடனடியாகச் செயற்படாதது குறித்து சி.ஐ.டி. விசாரணை நடைபெற்றுவருகிறது.

விமானக் கடத்தல் (Hi-Jack Situations) நடைபெறும்போது மட்டுமே செயற்படுவதற்கு இந்தப் படை அமர்த்தப்பட்டுள்ளதால், உத்தரவு கிடைக்கும்வரை தங்களால் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாது என்று அவர்கள் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (க)

## புதனன்று வருடாந்த உற்சவம்:

# தென்னிலங்கை பக்தர்கள் மடுவுக்குப் படையெடுப்பு!

வவுனியா,ஓக.14

நாளை புதன்கிழமை இடம்பெறும மடுத் தேவாலயத்தின் உற்சவத்தில் பலலாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கு பற்றுவர் என எதிர் பார்க்கப்படுகிறது.

தெற்கில் இருந்து நேற்று முன்தினம் முதல் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வவுனியாவுக்கு வரத் தொடங்கியிருப்பதாகவும் -

நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 9 ஆயிரம் பக்தர்கள் மடுவுக்குச் சென்றடைந்ததாகவும் -

வவுனியா செயலக வட்டாரங்கள் தெமரிவித்தன.

மன்னாரில் இருந்து 15 ஆயிரம் பக்தர்கள் மடுவுக்குச் செல்ல ஆயத்தங்கள் செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தில் பக்தர்களுக்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் மன்னார் செயலகம் செய்து வருகின்றது. (ஐ-3-9)

## சிறுவர் உரிமைகள் தொடர்பான

# விழிப்புணர்வு நாடகங்களை யாழ்.பல்கலை மாணவர் நடத்துவர்

யாழ்ப்பாணம்,ஓக.14

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக நுண்கருத் திட்டத்தின் கீழ் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் யாழ்.பல்கலைக்கழக நாடக முமஅரங்கியலும் மாணவர்கள் குழு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நாடகங்களை மேடையேற்றவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள அகதி முகாம்களில் மேடையேற்றப்படவுள்ள இந்த நாடகங்களின் மூலம் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்று யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது குடாநாட்டில் சிறுவர்களுக்குள்ள உரிமைகளை எவரும் மதித்து நடப்பதில்லை. அவர்களை அடக்கி ஒடுக்கவே முனைகின்றனர். இதனால்தான் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாகக் குடாநாட்டு மககள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது என்றும் -

இத்திட்டத்திற்காக அகதிகளுக்கான ஐ.நா.தூதரக நுண்கருத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-6)

### முன்பள்ளிக்கு அடிக்கல்

ஊாகாவற்றுறை முகாம் வீதியில் முன்பள்ளி ஒன்றுக்குக் கடந்த சனிக்கிழமை அடிக்கல் நடும் வைபவம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும், தீவக அமைப்பாளருமான ந.மதனராஜா கலந்துகொண்டு அடிகல்லை நட்டு வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் - எமது கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கவனத்திலெடுத்து, முன்பள்ளி பாடசாலைகளை இங்கு அமைத்துள்ளார். அது போன்று இந்த முன்பள்ளியை அமைக்க ரூபா இரண்டு லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார் என்றார். (க)

# நாவலர் வழிநின்று சைவம் வளர்த்த சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்

**சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரத்தின் 48ஆவது நினைவுதினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

"சைவ வாழ்க்கையில் துன்பத்துக்காயினம், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடமில்லை. சைவமாகிய கண்ணாடியிற் பார்த்தால் யாவும் உவப்பானவையாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடைக்காவிடின் துன்பமில்லை. எனது கப்பல் ஆழ்ந்துபோனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்துபோகும் என்று அஞ்சுவதில்லை. என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்ததுமில்லை" என்பது சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் 'சைவ வாழ்வு' பற்றித் தந்த சமயக்கொள்கைகள்.

இத்தகைய அருமருந்தன்ன வாசகங்களை அநுபூதியிற்கண்ட மகான் பெரியார் அவர்கள். மேன்மைகொள் சைவநீதியை உலகிற் பரப்ப அவதரித்தவர் இவர்.

புலோலி சுப்பிரமணியபிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் இளைய புத்திரராக 17.01.1878இல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை அயலிலுள்ள ஆங்கிலப் பாடசாலையிலும் இடைநிலை, உயர்நிலைக் கல்வியைத் தமிழகம் சென்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் கற்றார். அங்கு கல்விபெற்று B.A.பட்டதாரியானார். சிவவாழ்வு வாழ்ந்த பெரியார் ஆசிரியபணியாற்றும் காலத்தில் கல்விகற்பித்தல், பேச்சுவன்மை என்பன அனைவரையும் ஈர்க்கும் தன்மையாக அமைந்தன.

சைவப்பெரியாருக்கு என்று ஒரு மாணவர் பரம்பரை இன்றும் உள்ளது. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் அதிபராக இருந்து சைவம் வளர்த்த பெரியாரின் ஆத்மீக வாழ்வு, ஞான வாழ்வுகளின் அநுபவம் பலதரப்பட்டன.

சைவபோதம், முதலாம், இரண்டாம் புத்தகம், சைவசமயசாரம், திருவாசக மணிகள், தருக்கம், அகநூல், திருவருட்பயன் உரை போன்ற பல நூல்களை யாத்தார். இந்நூல்கள் அனைத்தும் சைவசிந்தாந்த உண்மைப் பொருள்களின் தத்துவத்தை இலகுவாக விளக்கி நிற்பன. சிக்கன வாழ்வை விரிவுபடுத்தி சிவானந்தப் பெருவாழ்வு வாழ்ந்தவர்.

ஈழநாட்டின் முருகன் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தில் ஓர் ஆச்சிரமம் அமைத்து அங்கு தவ வாழ்வு வாழத் தொடங்கினார். கொட்டிலில் வாழ்ந்த தவவாழ்வு மிகவும் மகத்துவமானது. பிரமச்சாரிய வாழ்வை பக்குவப்படுத்துவதில் சைவ உணவு முக்கியத்துவம் பெறுகின்றது. சைவப் பெரியார் தம் வாழ்வில் சாத்வீக குணத்தைத் தடைசெய்யும் உள்ளி, வெங்காயம், முருக்கங்காய் போன்ற உணவுகளைத் தவிர்த்தார். தம் தவயோக வாழ்வுக்கு சாத்வீகம் வளர்க்கும் உணவு வகைகளையே மேற்கொண்டார்கள்.


பெரியாரின் கல்வி அறிவுக்கும் சைவப் பணிக்கும் குலவித்தை, குருவித்தை என்பன கை கொடுத்தது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின் சைவசித்தாந்த கலாசாரத்தை மேன்மையடையச் செய்தவர் பெரியார். நாவலர் பெருமானைப் போன்று கந்த புராணப் படனம் செய்ய வல்லவராகக் காணப்பட்டார்.

**கா.சிவபாலன்**

இன்று நம் நாட்டில் தாண்டவமாடும் மதமாற்றம் எனும் நோய் திருஞானசம்பந்தர் காலம் முதல் இன்றும் தொடர்ந்து வருகின்றது. சைவப்பெரியார் திருவாசகம் ஓதி, சைவசமய உண்மைகளை மக்களுக்கு விளக்கி தடுத்து நிறுத்தினார். மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தி சைவப்பயிரை வளர்த்தார். சைவப்பெரியார் முன் நாணித் தலை குனியும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் மத மாற்றம் பற்றிக் கூறுமிடத்து ஒரு குருட்டு வழியே மதமாற்றம் என்பார்கள். ஈழத்துச் சைவ வரலாற்றிலே நாவலர் பெருமான், காசிவாசி செந்திநாதையர், சதாவதானி கதிரவேற்பிள்ளை என்போரை அடுத்து வருபவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களே.

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



(இன்று இருபத்தோராம் திருவிழா)

## ஓரழகாம் வேலழகு!

ஓரழகாம் வேலழகு பேரழகு!
ஓமெனும் சொல்லுக்கு வடிவழகு!
பாரினிலே அவனழகு முருகழகு!
பைந்தமிழ் பேசிடும் தனியழகு!

- இ.விஜயகுமன்.

## குடி செய்வையே!

முடியாத் துயரில் மூழ்கி முழுதும் கெட்டபெரு
மிடியால் புலியில் மேன்மை இழந்து பகைவர்தம்
பிடியால் துவண்டு வரண்டு பிறந்தோம் பெருமானே
குடியாய் வந்து கூடி இருந்து குடிசெய்வையே!

- முருகனடியான்.

## மடுநிறை மலர்ப்பொழில் குடிவள் நலூரே

கொடுவிட மடக்கியும் மதகரி உரித்தும்
அடுபடை மதனனை அருட்கனல் அழித்த
நடுநிலை ஒழுகுநம் பிரான்குகன் அமர்விடம்
மடுநிறை மலர்ப்பொழில் குடிவளர் நலூரே!

சங்கள வியகையன் சதுர்முகன் இருவரும்
தங்களில் சமர்செயத் தழலுரு ஆனானெம்
சங்கரன் உதவிய சரவண பவகுகன்
நுங்கள துயர்கெட நணுகுவன் நலூரே!

தக்கன கொடுமொழி தகைந்திட முழுமதி
அக்கணம் சடையிசைத் தரித்தஎம் ஈசன்தான்
குக்குடக் கொடியனைக் கொடுத்திட அமர்விடம்
நெக்குற மனனொடு நினைபவர் நலூரே!

- சிவ.சண்முகவடிவேல்,
ஏழாலை.

## தீதகற்றி அருளுக!

கார்மேகம் தவறாது கால மழைபொழிந்து
கரும்புமுதல் நெல் வரையும் காடாக விளைய
போர்மேகம் புயலோடு புறத்தேபோய் ஒழிந்து
பூங்காற்றாம் சமாதானம் புதுயுகத்தைக் கொணர
நேர்மையும் நீதியும் நிலை பெற்றுயர்ந்து - மனித
நேயமும் நியமமும் நெஞ்சமதில் வளர
சீர்கொண்ட நல்லூரில் தீதகற்றி அருளும்
சிவன் மைந்தன் முருகனை தேடி பதம் பணிவோம்!

- வி.பி.ஆர்.இராமச்சந்திரன்
திக்கம்.

## காட்டுவாய் விடிவு எமக்கு!

கெட்டவர் கொணர்ந்து வைத்து
கேடுறத் தீமை செய்ய
வட்டமாய் வந்து எம்மை
வாட்டியே வதைத்தவற்றை
சிட்டெனப் புகுந்து எம் குஞ்சு
சீரழித்திட செய்தீரே
மட்டிலாக் கருணை எண்ணி
மலைத் திட்டேன் சரணம் ஐயா!

மட்டிலாத் துயரம் தாங்கா
மனம் சலித்தோடி ஓடி
பட்டன எல்லாம் போதும்
பார்த்து நீ இருக்கலாமோ?
கட்டிலாக் கருணைப் பேறே
காட்டுவாய் விடிவு எமக்கு
மட்டிலா நகராம் நல்லூர்
மகாமணி சரணம் ஐயா!

- சரட்

## நல்லூரின் நாயகனே சரணம்

வித்தகனே விநாயகரின் தம்பியே சரணம்!
தேவர் சிறைமீட்ட செல்வனே சரணம்!
முத்தனே முடிவிலாமுதலே முருகனே சரணம்!
ஓம் சிவசக்தி மைந்தனே சரணம்!
நித்தமுமுன்னை நாம் நினைந்தோம் சரணம்!
நிர்மலனே ஓம் சரவணபவனே சரணம்!
சித்தமிரங்காயோ சிங்கார வேலவனே சரணம்!
நல்லூரின் நாயகனே சரணம் சரணம்!

- பே.சச்சிதானந்தம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வாரியப்புலம், குப்பிளான் தெற்கு என்னும் முகவரியுடைய செல்வி தம்பன் பூமணி என்பவரது தேசிய அ. அட்டை (இல.558633433V), விசேட அ.அட்டை, கொழும்பிலிருந்து பார்சல் அனுப்பிய பற்றுச்சீட்டு என்பன 11.08.2001 அன்று புத்தூருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மாலை 6.00 மணியளவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(91113)

## படிவம்

பட்டதாரி ஆசிரிய நியமன விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன. விண்ணப்ப முடிவு திகதி: 10.09.2001. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C/17834)**

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆசிரியர் சேவைக்கு தமிழ்மொழிமூல விஞ்ஞான/கலை/நுண்கலை/வர்த்தக பட்டதாரி பயிலுநரைச் சேர்ப்பதற்கான படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன், மானிப்பாய். (91132)

## விற்பனைக்கு

வீடியோ கசற் விற்பனைக்குண்டு. பழைய புதிய திரைப்படங்கள். **28/1,** சோமசுந்தரம் அவெனியூ, கண்டுகுளி (கச்சேரியடி), யாழ்ப்பாணம். **T.P.2379** **(91122)**

ஜெனறேற்றர் (டீசல் என்ஜின் 31/2 **k.v**.டைனமோ), போட்டோக் கொப்பியர் 1016 - **Sharp,** லெமினேற்றிங் மெசின் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 254 அல்லது 368, சிவன் கோயிலடி, **K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். **T.P.** 021-2810. (91099)

பாவிக்கக்கூடிய நிலையிலுள்ள நெசவுக்குரிய கைத்தறிகளும் வார்ப்பு ஓடும் கருவியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திருமதி **S.**இரகுநாதன், 39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் **or** டாக்டர் வி.யோகநாதன், 178, பிறவுண் வீதி. தொலைபேசி: 2116 **or** ச.அம்மையப்பர், வடக்கு வீடு, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (91015)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 09 - 1957



உதிர்வு 26 - 07 - 2000

## திருமதி குலம் றோஸ்மலர்

திதி:14.08.2001

கை கொடுத்த கணவனின்
பாசக் குமுறலும்
பெற்றெடுத்த குழந்தைகளின்
உள்ளத் தவிப்பும்
உடன் பிறந்த சகோதரர்களின்
கண்ணீர்ப் பெருக்கும்
நீர் எம் மீது காட்டிய பாச உணர்வும்
என்றுமே மறையாது! என்றும்
எம்மோடு உமது நினைவலைகள்
என்றென்றும் ஜீவிக்கும்!

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

- கணவர், பிள்ளைகள்.

*இலந்தைக் காடு,*
*வல்வெட்டித்துறை.*
(91081)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக முதன்மை ஆசிரியர்
திரு.நா.சுவாமிநாதன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நாராயணபிள்ளை கண்ணகைப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

முதன்மை ஆசிரியர் ஒன்றியம்
***யாழ்.கல்வி வலயம்.***
(91134)

# மரண அறிவித்தல

## திருமதி நாராயணபிள்ளை கண்ணகைப்பிள்ளை

*(இடைக்காடு, அச்சுவேலி)*

இடைக்காட்டைச் சேர்ந்த திருமதி நாராயணபிள்ளை கண்ணகைப்பிள்ளை நேற்று (2001.08.13) திங்கட்கிழமை உடப்பில் காலமானார்.

இவர் அமரர் சு.நாராயணபிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் கந்தசாமி (உடப்பு), சுவாமிநாதன் (ஆசிரிய ஆலோசகர்), இராசேஸ்வரி (கந்தர்மடம்), நாகேஸ்வரி (ஓமான்), ஈஸ்வரன் (கனடா), சின்னையா (ஆசிரியர், விவேகானந்தா, ம.வி.திருமலை), இராமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்கையர்க்கரசி, டாக்டர் வைரமுத்து, தெய்வநாயகி, திருநாவுக்கரசு (பொறியியலாளர், ஓமான்), குகமலர் (உடப்பு), செல்வராணி (ஆசிரியை), இரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.08.2001) திங்கட்கிழமை உடப்பில் நடைபெற்றன.

நா.சுவாமிநாதன்,
ஆசிரிய ஆலோசகர்.

*G.P.S. வீதி,*
*கல்வியங்காடு.*
(91135)

# ஜே.வி.பியின் ஒத்துழைப்புடன் ஆட்சி நீடிக்குமா? இன்று பொ.ஐ.மு. மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஓக.14

ஜே.வி.பியின் ஒத்துழைப்போடு ஆட்சியைத் தொடர்ந்து முன்னெடுப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக பொ.ஐ.முவின் மத்திய குழுக்கூட்டம் இன்று கூடவிருக்கிறது.

இந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை வகிப்பார்.

இந்தக் கூட்டத்தில் வைத்து ஜே.வி.பி. தலைவர்களுக்கும் தனக்கும் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கு ஜே.வி.பி. முன்வைத்துள்ள நிபந்தனைகள் குறித்து ஜனாதிபதி விளக்கமளிப்பார்.

செப்ரெம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டுதல், ஒருவருட காலத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துதல், தேர்தல்கள் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துமுகமாக சுதந்திர தேர்தல் ஆணைக்குழு உட்பட மொத்தம் ஐந்து ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற நிபந்தனைகளை முன் வைத்திருக்கின்றனர் ஜே.வி.பி. தலைவர்கள். அத்துடன் அமைச்சரவையின் எண்ணிக்கையை 30 ஆகக் குறைக்க வேண்டும் என்றும் இதற்கு அரசு இணங்க வேண்டும் என்றும் ஜனாதிபதியுடன் நடந்த பேச்சின் போது அவர்கள் கோரியிருக்கின்றனர்.

ஜே.வி.பியின் இந்த கோரிக்கைகளை ஏற்று ஒருவருட காலத்துக்கு பொ.ஐ.மு. ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதா என்பதை தீர்மானிப்பதற்காகவே பொ.ஐ.முவின் மத்திய குழுக் கூட்டம் இன்று கூட்டப்படுகிறது.

தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை நிறுவுவது தொடர்பாக ஐ.தே.கவுடன் பொ.ஐ.மு. கட்சியிலுள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள், திட்டவட்டமான முடிவுகள் எதுவும் இன்றி நீடித்து வருகிறது.

தேசிய நல்லிணக்க அரசில், பிரதமர் பதவி உட்பட முக்கிய அமைச்சர் பதவிகளைத் தங்களுக்குத் தர வேண்டும் என்று ஐ.தே.கவினர் கூறி வருகின்றனர் என்றும் -

இதனை ஏற்பதைவிட ஜே.வி.பியின் நிபந்தனைகளில் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவுவதே பொ.ஐ.முவின் எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கு நல்லது என்ற அபிப்பிராயமும் கட்சி வட்டாரங்களில் நிலவுகிறது என்றும் கூறப்படுகிறது.

செப்.7க்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது பற்றியும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

இதேவேளை விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமையும் நடைபெறவிருக்கிறது.

ஜே.வி.பியின் இடைக்கால அரசு யோசனைக்கு மத்திய குழு அங்கீகாரம் வழங்கினால், நாடாளுமன்றத்தை எப்பொழுது மீண்டும் கூட்டுவது என்பது பற்றி வியாழக்கிழமை நடைபெறும் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என் எதிர்பார்க்கப்படுகிறது.

செப்.7க்கு முன்னர் நாடாளுமன்றம் கூட்டப்படுவதை அரசு மேலிடம் விரும்புவதாகத் தெரியவில்லையாம்.

இதற்கு முன்னர் ஜே.வி.பியுடன் ஆட்சியைத் தக்கவைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படுமானால், இந்த மாதம் வரும் மூன்றாம் வாரத்தில் ஒரு நாள் பெரும்பாலும் 21ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படலாம் என்றும் தெரியவருகிறது. (க)

# பாராட்டி நன்றி கூறுகின்றோம்

வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தின்
திருப்பணி திருத்த வேலைகளுக்காக
நிதியுதவி வழங்கிய,



வடக்கு - அபிவிருத்தி, புனர்வாழ்வு,
புனரமைப்பு, மற்றும் வடக்கு - கிழக்கு
தமிழ் விவகாரங்கள், இந்து சமய கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈ.பி.டி.பியின்
யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய
கௌரவ
**கே.வி. குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்





பருத்தித்துறை பிரதேச சபைத்
தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக்
கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமாகிய
உயர்திரு.
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்** (J.P.U.M.)
**(ரங்கன்)**
அவர்களுக்கும்


எமது ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு
நிதி வழங்கியமைக்காக பாராட்டி வாழ்த்துக் கூறி
எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
குருக்கட்டு சித்திவிநாயகர் ஆலயம்.

*வல்லிபுரம்,*
*புலோலி.*
(91138)

# நீங்காத நினைவலைகள்





## கல்பனா இராசேந்திரம்

(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி-ஆண்டு 10)

தோற்றம் 07-11-1986 மறைவு 20-06-2001

**எம் குடும்பத்தின் இளந்தளிரே!**
**எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு**
**இடைநடுவில் விண்ணுலகம் சென்றனையோ?**
**பள்ளித் தோழியரும் உன் பிரிவால் பரிதவிக்க**
**பாரினில் இருந்து மின்னலென ஓடி**
**மறைந்த தேனோ?**

## அமரர் தம்பு பாலசிங்கம்

(முன்னாள் அரச கட்டட ஒப்பந்தகாரர்)

தோற்றம் 26-04-1943 மறைவு 01-07-2001

**எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!**
**பொதுவுடைமை வாதியாய் பொதுச்சேவையாளனாய்**
**சமூகவிடுதலை விரும்பியாய் நீங்கள்**
**மரணத்தை நாடிச் சென்றபோது அது வரவில்லை!**
**உறவைத் தேடிச் சென்றபோது**
**மரணம் அரவணைத்ததேனோ?**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

*72/4, பலாலி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
*பிரதான வீதி,வல்வெட்டி.*
(90844)

## பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளுக்கான

# விரிவுரையாளர் தெரிவுக்குரிய

# நேர்முகப் பரீட்சையில் குளறுபடி?

அச்சுவேலி, ஓக. 14

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குவிரிவுரையாளர்களை ஆள்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, மீண்டும் நேர்முகப்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைகள் கடந்த மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றன.

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு பாடரீதியாக 9 விரிவுரையாளர்களையும், கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு பாட ரீதியாக 9 விரிவுரையாளர்களையும் தெரிவு செய்வதற்காக — அவசர அவசரமாக இந்த நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இந்த நேர்முகப் பரீட்சையில் 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்கள் உள்ளடங்கிய குழு நேர்முகப் பரீட்சைகளை நடத்தியது.

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட வேண்டிய நடைமுறை ஒழுங்குகளுக்குப் புறம்பான விதத்திலும்; நேர்முகப் பரீட்சையில் பரீட்சார்த்திகளை நேர்முகம் செய்த ஒழுங்கு முறையிலும் சந்தேகம் கொண்ட பலர் இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்தனர்.

நேர்முகப் பரீட்சையில் உள்ள முறைகேடுகள் தொடர்பான புகார்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுக்கும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் மேலிடங்களுக்கும் செய்யப்பட்டதை அடுத்து, ஜூலை முற்பகுதியில் திடீரென நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்படாமல் முடக்கி வைக்கப்பட்டிருந்ததாக அறியவந்தது.

மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி உள்ளிட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விரிவுரையாளர்களையதெரிவு செய்வதற்கான புதிந்நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறியப்படுகின்றது.

(ஐ-7-11)

## வெங்காயம் விலையில் சரிவு

தென்மராட்சி, ஓக. 14

வடமராட்சிப் பகுதியில் வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளதை அடுத்து வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கிலோ 60 ரூபா வரை விற்கப்பட்ட வெங்காயம் தற்போது கிலோ பத்து ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை—

பம்பாய் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது ஒரு கிலோ பம்பாய் வெங்காயம் 20 ரூபா முதல் 25 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(க-117--173)

## விபத்தில் காயம்

தென்மராட்சி, ஓக. 14

'ரியூசன்' முடிந்து மாணவர்கள் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்றதால் மோட்டார் சைக்கிள் வீதியின் அருகே உள்ள மரத்துடன் மோதிய சம்பவம் நேற்று முன்தினம் புலோலி உபய கதிர்காமம் பகுதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்ற குடத்தனை அம்பனையைச் சேர்ந்த பீ. வேலும் மயிலும் (வயது 42) என்பவர் இச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-117)

## தாச்சி ஆட்டம்

வலி.வடக்கு, ஓக். 14

யாழ் மாவட்ட தாச்சி சங்கம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபையின் மருதனார்மடம் திறந்த வெளி அரங்கு மைதானத்தில் இடம் பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகமும்சண்டிலிப்பாய்வசந்த ஸ்ரீ விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன.

(ஐ-86)

## கிராம அலுவலரின் அலுவலகக் கடமை நேரம்

தென்மராட்சி, ஓக. 14

சகல மாவட்டங்களிலும் கடமையாற்றும் அனைத்து கிராம அலுவலர்களும் பிரதி திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணி வரையும் தமது அலுவலகங்களிலிருந்து கடமையாற்ற வேண்டுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

வெளிக்கள வேலைக்குச் செல்லாத நாள்களிலும் அலுவலகங்களில் கடமையாற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-117)

## யாழ். கல்வி வலயத்தில் அடுத்த வாரம் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். மாவட்டத்தின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 21 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 4 30 மணி வரையும் யாழ். கல்விவலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர். சிவானந்தன், மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளை மற்றும்ஐந்து வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அவற்றின் உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் கல்வி அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் இந்த நடமாடும் சேவையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மேற்படி சேவையில் தமது பரச்சினைகளைத் தெரியப்படுத்த உள்ளோர் வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று 16 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு முன்பு தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் விண்ணப்பங்களை மீளவும் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விண்ணப்பங்களை ஒப்படைத்தவர்கள் மட்டுமே அன்றைய தினம் சமுகமளித்துத் தமது பிரச்சினைகள் பற்றி முறையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## வயோதிபரை கருங்குளவிகள் தாக்கின!

தென்மராட்சி, ஓக. 14

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திறகுச் சென்று விட்டு வீடு திரும்பிய வயோதிபர் இடை வழியில் கருங்குளவிகளால் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிறு தினம் இடம்பெற்றது.

சைக்கிளில் வந்த வேளை பனையிலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகளே இவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த கா. சோமநாதன் (வயது 80) என்பவரே குளவிகளால் தாக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(க-117)

## விளையாட்டு போட்டி

வடமராட்சி, ஓக. 14

புலோலி கல்வி நிலைய பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இளைப்பாறிய அதிபர் சி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப் போட்டிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் என். மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-173)

## 'குமண' வருகிறது

வடமராட்சி, ஓக. 14

தனியார் வர்த்தகர்களுக்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் குமண கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையை வந்தடையவுள்ளது.

(க-173)

## ஒன்று கூடல்

கொக்குவில் மக்கள்சேவைச் சங்கத்தின் ஒன்றுகூடல் வைபவம் நாளை புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு செ. சிவானந்தன் தலைமையில் சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்த ஒன்று கூடலில் அனைத்துத் தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# பாடவிதானங்களுக்கு அப்பால்

# ஆசிரியரின் சமூகக் கடமைகள்

நமது வாழ்வு எல்லாவழிகளிலும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் காலமிது. சூழ்நிலையின் அழுத்தங்கள் பாரிய உளவியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருப்பதாக உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இது வெறும் தனிமனிதப் பிரச்சினையல்ல. சமூகம் தழுவிய எல்லோரையுமே பாதிக்கின்றஒரு பிரச்




சினை இது. நமது மனவலிமையைச் சிதறடித்து எம்மைப் பலவீனர்களாக்கி செயலற்ற நிலைமைக்குள் தள்ளிவிடுகின்ற பாரிய அச்சுறுத்தல் இது.

அரை நூற்றாண்டுக்கு மேலாக அடிமைத்தனத்தை சிலுவையாக முதுகில் சுமந்து வருபவர்கள் நாங்கள். இந்த அடிமை மனப்பாங்கு யாரோ ஒருவருக்கு அல்லது ஏதோவொரு கூட்டத்தினர்க்கு பயந்து எமக்குள்ளேயே ஒடுங்கிப் போய்விடுகிற வாழ்க்கைக்கு எம்மைப் பழக்கப்

## இன்றைய சூழ்நிலையில் அவர்களின் பொறுப்பு என்ன?

படுத்தியிருக்கிறது. இதன் விளைவு என்ன? எங்களது ஆற்றல்கள் ஒடுங்கிப் போய் விட்டன. தாழ்வுணர்ச்சியும், அவநம்பிக்கையும் எம்முன் இரண்டறக் கலந்துவிட்டன. எதிர்ப்படுகின்ற சோதனைகளை மனஓர்மத்துடன் எதிர்கொள்வதற்குப் பதிலாக ஒருவாறு சமாளித்துச் போய் விடுகிற பழக்கம் இயல்பாகி விட்டது.

யாராவது வந்து இப்பிரச்சினையைத் தீர்ப்பார்கள், நமக்கேன் தொல்லை. பேசாமல் ஒதுங்கி நிற்போம், என்ற மனப்பாங்கு எமது பண்பாட்டுடன் இரண்டறக் கலந்து விட்டது. அடங்கி வாழ்வது எப்படியென்று எமக்கு அரிச்சுவடியிலேயே போதிக்கப்படுகிறது.

'வாழ்வா சாவா' (To be (or not to be) என்கிற கத்தி முனையில் நிற்கும் பிரச்சினை எங்கள் ஒவ்வொருவரையும் நேரடியாகப் பாதிக்கின்றது. இக்கத்தி முனைப் பிரச்சினையிலிருந்து ஒதுங்கவும் முடியாத எதிர்கொள்ளவும் முடியாத இரண்டுங்கெட்டான் நிலையில் நாங்கள் நிற்கின்றோம்.

தாழ்வு மனப்பான்மையும், விரக்தியும், நழுவி விலகிப்போடும் சிந்தனையும் எமது சமூக முன்னேற்றத்தை முடக்கி விட்டது. இதைப் புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்திருக்கிறோமா? செயல் முனைப்பையும், மனவலிமையையும், வாழ்க்கையை எதிர்கொள்ளுகின்ற மனப்பாங்கையும் மீட்டெடுக்காது விட்டால் எமக்கு விமோசனமே இல்லை, எமது சமூகத்தின் பாரம்பரிய, பண்பாட்டு கலாசார விழுமியங்கள் பாலை வனமாகிப் போவதை நாம் விரும்புகிறோமா?

இன்று எம்மைச்சூழ நடந்து கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் எல்லாம் எமது சக்திக்கும், புத்திக்கும் அப்பாற்பட்ட வகையில் தாங்க முடியாதவையாக உள்ளன. எமது எதிரிகள் யார், இரட்சகர்கள் யார் என்று புரிந்து கொள்ளமுடியாத குழப்பமான சூழ்நிலையில் நாமுள்ளோம்.

மக்களின் நிம்மதியையும், இயல்பு வாழ்க்கையையும் பணயம் வைத்து அரசியல்வாதிகள் அரசியல் பித்தலாட்டம் ஆடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வரசியல் பித்தவாட்டத்தின் விளைவாக ஏற்படுகின்ற பொருளாதார உளவியல் சுமைகளைச் சுமந்தவர்களாக நாம் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆட்சியாளர்கள் செய்வதறியாது குழப்பமடைந்து நிற்கிறார்கள். அவ்வப்போது ஏற்படுகின்ற சில அமைதியான சூழ்நிலைகளைக்கூட நிரந்தர அமைதிக்கான ஒரு சமிக்ஞையாக எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமலுள்ளது. அடுத்து நிகழப்போகும் ஏதோவொரு பூகம்பத்துக்கான அறிகுறியாகவே எண்ண முடிகிறது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் எமக்குத்தேவை ஒரு புதிய ஆசிரியன். பாடவிதானங்களுக்கப்பால் சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனையும் சூழ்நிலையின் சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொள்ளத் தக்கவனாக மாற்றக்கூடிய செயற்றிறன் மிக்க ஓர் ஆசிரியனே இன்றைய காலத்தின் தேவை. வாழ்க்கையின் ஒவ்வோர் அடிவைப்பிலும் எழுகின்ற சிக்கல்களுக்கு முகங்கொடுத்து அதற்கூடாகத் தன்னையும் புடம்போட்டு தனது சீரியசிந்தனையாலும், செயலாலும் ஒரு புதிய சமூகத்தை உருவாக்குகின்ற ஒரு புதிய ஆசிரியனே இன்று எம் சமூகத்தின் தேவை.

ஆசிரியர்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாகவும், சமூக மருத்துவர்களாகவும்(Social Physicians)மாற வேண்டிய வரலாற்றுச் சூழலில் இன்று நாம் நிற்கின்றோம். இது காலத்தின் அறைகூவல். இவ் அறைகூவலுக்குப் பதிலளிக்க ஆசிரியர்களாகிய நீங்களும், நானும் தயாரா?

-வதிரி வாசன்-

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய**

புன ப்பு வேலைகளுக்காக ரூபா **3** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, முதற் கட்டமாக ரூபா **150,000/=** தந்து உதவியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள்
இந்து கலாசார அமைச்சரும்
ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பி. கட்சியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
கௌரவ **கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

எமது அன்புக்கும் நம்பிக்கைக்குமுரிய
ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாண அமைப்பாளர்
**உயர்திரு. ரி.றீகன்** அவர்களுக்கும்

**எமது பாதுகாவலாக விளங்கும் புனித செபமாலை அன்னையின் ஆசீர் என்றென்றும் கிடைக்குமென்றும் பிரார்த்தித்து, உங்களின்பணி என்றென்றும் தொடரவேண்டுமென உளம் கனிந்த நன்றியையும் பாராட்டுக்களையும் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

- பங்குத்தந்தை,
மேய்ப்புப்பணிசபை,
பங்குமக்கள்.

புனித செபமாலை அன்னை ஆலயம்,
கொழும்புத்துறை.
(91202)


## யாழ்.மாவட்ட பதிவாளர் சங்கம்

**பதில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்களை நிரந்தர நியமனமாக்கல்**

மேறபடி விடயமாக க்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைச்சர் **மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா** அவர்கள் சகல பதில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்களையும் நாளை (15.08.2001) புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் சந்திக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சகல பதில் பதிவாளர்களையும் பங்குகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
*யாழ்.மாவட்ட பதிவாளர் சங்கம்.*
(91148)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா தவமணி

மாம்பிராய் வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, நாயன்மார்கட்டை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தவமணி 12-08-2001 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (கனடா), சுபேந்திரன் (ஜேர்மனி), உஷா (ஜேர்மனி), ஜெயந்திரன் (கனடா), யுகந்திரன் (ஜேர்மனி), வனஜா, றஜீந்திரன் (கனடா), கிரிஜா (சுவிஸ்), அனுஜா (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளினி (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), மனோரஞ்சன் (ஜேர்மனி), குயின்ரா (கனடா), குணசேகரன், சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

• அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*நாயன்மார்கட்டு.*
(91142)

தகவல்:
திருமதி வனஜா குணசேகரன்

## திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சுப்பிரமணியம் 2001.08.12 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், இராமலிங்கம், சின்னம்மா, அமரர் நாகரத்தினம், கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராதேவி, அமரர் ஜெயராசசேகரம் (வின்ஸ்லோ), சந்திரசேகரம் (சின்ராசா - வர்த்தகர்), ஞானசேகரம் (C.T.B), குணசேகரம் (கண்ணன் - இந்திரா ஹாட்வெயர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அம்பலவாணர் (ஓய்வுபெற்ற அதிபர்), ஜெயமணி, விஜயதேவி, லலிதா, தவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், கருணாகரன் (லண்டன்), கலாதேவி (சுகாதாரத் திணைக்களம் - திருகோணமலை), சிறிதரன் (லக்சுமி நாராயணன் நகையகம்), தர்சினி (இராமநாதன் நுண்கலைப்பீடம்), குகதாஸ், தர்மினி, லவன் (யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூ.ச.), துஷிதா (ஜேர்மனி), நிரேஷ் (பிரியங்கா நகை மாடம்), சதீஸ் (நிருத்திகா நகை மாடம்), பிரசன்னா, திலீப், சஞ்சீவன், விதுரா, மதிவதனி (பிரதேச செயலகம் - உடுவில்), மதனரூபன், துவா ரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2001) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*
(91144)

தகவல்:
ஞானம்
(மகன் - C.T.B.)

## ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி, ஓக.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, 8, 9 ஆகிய வகுப்புகளில் விஞ்ஞானம், சமூகக் கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'சனத்தொகையும், குடும்ப வாழ்க்கைக் கல்வியும்' என்னும் செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மேற்படி செயலமர்வில் பங்குபற்றாத ஆசிரியர்களும் இச்செயலமர்வில் கலந்து கொள்ளுமாறும், செயலமர்வில் பங்கு பற்றும் ஆசிரியர்களுக்கு 250 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஜ-117)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**முகாமைத்துவக் கற்கையியல் வணிகபீடம்**

**பரீட்சைகள் - 2000**

தொழில் நிர்வாகமாணி
பரீட்சை பகுதி II
வணிகமாணி
பரீட்சை பகுதி II

மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சைகள் 03.09.2001ஆம் ஆண்டு ஆரம்பமாகும். பரீட்சைக்கான அனுமதிஅட்டையை 27.08.2001 இல் இருந்து பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

*பதிவாளர்.* (C/17853)

**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

**ACADAMIC YEAR 2001/2002**

ORIENTATION PROGRAMME
(New entrants B.Ad./B.Com.)

The above programme will commence on 3rd September 2001. All registered students are requested to follow this programme for a period of one month.

(C/17854) *Registrar.*

**PERSONAL**

A wealthy Loncly Pensioner wants a respectable healthy widow for early companionship marriage.

Preference to those who are capable of maintaining his books sales and Bank accounts in tamil.

Eligible for full pension rights at pensioner's death a benefit for last days.

***Apply with personal particulars:***

C.M.S.Nathan
Lucky Mahal
No.118,
Main Street,
ILAVALAI.
(89985)

உ
சிவமயம்
**திருமண அழைப்பிதழ்**
*நிகழும் விஷு வருஷ ஆவணித் திங்கள் சுப நாளில் சுபமுகூர்த்த வேளையில்*
**OFFSET OR DIGITAL**
முறைகளில் உங்கள் திருவளர் செல்வன் செல்விகளின் திருமண அழைப்பிதழ்களை அழகிய வடிவமைப்பில், குறித்த தவணையில், குறைந்த செலவில் அச்சிட்டுப் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.
இங்ஙனம்
*தங்கள் நல்வரவை நாடும்*
**பத்மாஸ்** உன்னத கணனி பதிப்பகம்
28/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாணம்

**நல்லைக் குமரன் மலர் 2001 (09)**

# வெளியீட்டு விழா

*தலைவர்:-* திரு.இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளரும்,
சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும்

*காலம்:-* நாளை (15-08-2001) புதன்கிழமை
முற்பகல் 9.00 மணி (புதிய நேரம்)

*இடம்:-* **துர்க்காதேவி மணிமண்டபம், கோயில் வீதி, நல்லூர்.**

*ஆய்வுரை:-* திருமதி கலைவாணி இராமநாதன்
முதுநிலை விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பயனுள்ள பல ஆக்கங்களைத் தாங்கி நறுமணம் பரப்பும் மலரினைப் பெற்று படித்துப் பயன்பெறும் வண்ணம் ஆர்வலர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.**

*சைவசமய விவகாரக் குழு.*
*யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.*
(C/17848)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ பிடாரியம்மன் ஊர்ப்பொது ஆலயம், நெடுந்தீவு மேற்கு**


**மேற்படி ஆலய புனர்நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,00,000 நிதி ஒதுக்கித் தந்தமைக்காக -**



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சரும், ஈ.ம.ஜ. கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



ஈ.ம.ஜ. கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான
கௌரவ
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



ஈ.ம.ஜ. கட்சியின் தீவக பிரதம அமைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான
உயர்திரு.
**ந.மதனராஜா (மனோ)**
அவர்களையும்



எமது ஆலய வளர்ச்சியில் ஒத்துழைப்பும், ஊக்கமும் நல்கிவரும் நெடுந்தீவு அமைப்பாளரும், நெடுந்தீவு பிரதேச சபை உப தலைவருமான
உயர்திரு.
**K.நவநீதன் (மோகன்)**
அவர்களையும்

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர்
**A.W.அரியநாயகம் (J.P.U.M.)**
அவர்களையும்

நெடுந்தீவு உதவி அமைப்பாளர் உயர்திரு. **K.றஞ்சன் (தர்மன்)** அவர்களையும்


**எமது இதயபூர்வமான நன்றிகளுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

*நெடுந்தீவு மேற்கு,*
*நெடுந்தீவு.*
(91147)

- நிர்வாகத்தினர்,
ஸ்ரீ பிடாரியம்மன் ஊர்ப்பொது ஆலயம்.

## பல்லாண்டு காலம் பாங்கான சேவையில்
## பல்லாயிரம் உள்ளங்களில் உவப்புடன் நிலைக்கும்...

# நீகல் வீடியோ



- வீடியோவுக்கென வெளிநாட்டிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட "வீடியோ காட்" பொருத்தப்பட்ட டிஜிட்டல் கொம்பியூட்டர் உதவியுடன்,
- Mx50 மிக்சர், வீடியோ நிக்சி,
- மற்றும் FM Still கமரா, அதிநவீன வீடியோ கமராக்கள் மூலம், புதிய தொழில்நுட்ப உத்திகள், கலை நுணுக்கங்களுடன் படம் பிடித்திடவும், மிக்சிங் வேலைகள் செய்யவும்,
- உங்கள் இல்லங்களுக்கு ஏற்றவாறு பல்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் அமைக்கப்படக் கூடிய அலங்காரப் பந்தல்கள்,
- பூப்புப்புனித நீராட்டு விழாக்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட
  - சுழல் தாமரை
  - மாடிப்படி
  - பிறை
  - பலவர்ணக் குடைகள் எனப்பலவும்
- பூமணவறைகள், Box Set வகைகள்
- இயற்கை எழில் கொஞ்சும் நீர் வீழ்ச்சிகள் பாயும், பூங்காப் படப்பிடிப்பு...
- மின் விசிறிகள், பலவர்ண மின்குமிழ்கள், பாய்கள், இரும்பு, பிளாஸ்ரிக் கதிரைவகைகள், குடின் கதிரைகள், பெரிய குத்து விளக்குகள், தண்ணீர் பரல்கள், சமையல் பாத்திரங்கள் மற்றும் பலவகைச் சோடனைகள்

ஆகிய அனைத்தும் இங்கே எம்மிடம் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- எமது வீடியோப் படப்பிடிப்புகள் இலவசமாகவே, ரேப்பில் இருந்து CDக்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
- வீடியோ படப்பிடிப்பாளர்களே →
  - நீங்கள் விரும்பிய அளவுகளில் டிஜிட்டல் கொம்பியூட்டர் மூலம் ரைரில் பதிப்பதற்கு ரூபா 200/= மட்டுமே!
  - கொப்பியில் இருந்து CDக்கு மாற்றிப் பதிப்பதற்கு ரூபா 1250/= மட்டுமே!
  - எம்மால் பதிக்கப்படும் CDக்கள் எந்தவொரு CD பிளேயரிலும் பயன்படுத்தப்பட முடியும்
- வாடிக்கையாளர்களே.... எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள் தரகர் வேண்டாம்... பண விரயமும் வேண்டாம்!

உங்கள் மகிழ்வின் தேவை!
எங்கள் திறமையின் சேவை!!
இன்றே நாடுவீர்....

# நீகல் வீடியோ

ஸ்ரான்லிக் கல்லூரி லேன்,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

T.P. - 2896

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

உங்கள் பெறுமதிமிக்க பங்கஸ் பிடித்த ரேப்புக்களை புதியது மாதிரி கிளீன் பண்ணி புது ரேப்பில் அல்ல CDயில் பதிவு செய்து தரப்படும்.

40அடி அலங்காரப் பந்தல்
வீடியோ
பிளாஸ்ரிக் கதிரைகள்
சமையல் பாத்திரங்கள்
சோடனை வகைகள்
} இலவயாகவும் 15,000/=

(91150)


# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
## கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

01) கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினரால் 2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 06 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

02) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) இக்ராட் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்.-9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03) ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்விவைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| I) ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி அலுவலகத் திருத்த வேலை. | ரூபா 3,500/= | ரூபா 250/= |
| II) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளுக்கான சுகாதார கல்விப் பிரிவு நிர்மாணித்தல் (கட்டடம்1) | ரூபா 16,000/= | ரூபா 500/= |

05) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06) இவை தொடர்பாக மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

*பிரதம எந்திரி அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம்,*
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.* (C/17851)

**பிரதம பொறியியலாளர்,**
**யாழ்ப்பாணம்.**

## யாழ்.ஆஸ்பத்திரியில் உலக சுகாதாரக் குழு

யாழ்வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக உலக சுகாதார நிறுவன அதிகாரிகள் குழு நேற்று வைத்திய சாலைக்கு விஜயம் மேற்கொண்டது.

ஆஸ்பத்திரியில் பணியாளர் மற்றும் வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்த குழுவினர் ஆஸ பத்திரியையும் பார்வையிட்டனர்.(ஒ-139)

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு

யாழ். மாவட்டப் பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தினர் நாளை காலை 9 மணிக்கு அமைச்சர்களைச சந்திக்கவுள்ளதாகவும் - சங்க அங்கத்தினர்கள் அனைவரையும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளும் படி சங்கத்தலைவர் கேட்டுள்ளார்.

## உயர் தொழில்நுட்ப மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.14

உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒன்றியக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 11 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (உ-3)


**நாகம்ஸ் சுன்னாகம்**

வேணு, ரோஜா (இரட்டை வேடம்) நடித்த
பொட்டு அம்மன்
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91183)

**லக்சுமி இணுவில்**

3ஆவது வெற்றி வாரமாக
M.G.R., லதா நடிப்பில்
உரிமைக்குரல்
தினசரி 10.30, 2.30 (ப.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00 (ப.நே.)
(91207)

**ராஜா யாழ்ப்பாணம்**

(C/17644)
இளைய தளபதி விஜய், தேவயானி, சூர்யா நடிப்பில
பிரண்ட்ஸ்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)


## இருபாலை அருள்மிகு லிங்கப் பிள்ளையார் தேவஸ்தானம்
(பழம்பிள்ளையார்)
## மஹோற்சவ விஞ்ஞாபனம் 2001

உற்சவ கால விவரம்:

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 15-08-2001 | புதன் |
| நாகலிங்க உற்சவம் | 19-08-2001 | ஞாயிறு |
| வேட்டைத்திருவிழா | 21-08-2001 | செவ்வாய் |
| சப்பறத்திருவிழா | 22-08-2001 | புதன் |
| தேர்த்திருவிழா | 23-08-2001 | வியாழன் |
| தீர்த்தத்திருவிழா | 24-08-2001 | வெள்ளி |
| கொடியிறக்கம் | 24-08-2001 | வெள்ளி |
| வசந்தோற்சவம் | 25-08-2001 | சனி |
| பிராயச்சித்தம் (வைரவர்சாந்தி) | 26-08-2001 | (ஞாயிறு) |

26-08-2001 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அன்னதானம் இடம்பெறும்.

மஹோற்சவ பிரதமகுரு : சிவஸ்ரீ சதா.மகாலிங்க சிவக்குருக்கள்
*(அரசடிப் பிள்ளையார் தேவஸ்தானம் - நாயன்மார்கட்டு)*

"தெய்வீகப் பேருரை"
*தினமும் மாலை 5.30–630 மணிவரை (பழைய நேரம்)*
பொருள் :- நாயன்மார் காட்டிய நல்வழி
நிகழ்த்துபவர் :- திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிரதம சீடன் *"பிரசங்க பூசணம்"* சுழிபுரம் – நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A.Dip.Ed.
*(வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்)*
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

*கேணிக்குளம் பதி,*
*இருபாலை கிழக்கு.* (91137)
- தேவஸ்தானம்.

# கண்ணீர் அஞ்சலி

எம் சகோதர ஊழியன் திரு. S.ஞானசேகரம அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

அவர்களின் திடீர் மறைவுகேட்டு எம் உளநெகிழ்வுகளை கண்ணீராக்கி அஞ்சலியாக்குவதோடு தாயாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டிக் கொண்டு துயருற்றிருக்கும் குடும்ப உறவினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட.பிரதேச போ.சபை, ஊழியர்கள்,
கோண்டாவில் சாலை.
(91209)

# கண்ணீர் அஞ்சலி

## குமாரசாமி சிவராசா

நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட குமாரசாமி சிவராசா அவர்கள் 12.08.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் அகாலமரணம் அடைந்துள்ளார்.

அன்னார் ஒரு புகழ்பெற்ற நாடகக் கலைஞரும் இடதுசாரி கொள்கையைக் கொண்டவரும் ஆவார். நெல்லியடி அம்பலத்தாடிகள் நாடகமன்றத்தின புகழ்பூத்த கந்தன் கருணை நாடகத்தில் நாரதராக வேடம்பூண்டு நாரதர் சிவராசா என்ற பட்டத்தையும் புனைபெயரையும் பெற்றுக்கொண்டார்.

அன்னாரின் அகால மரணச்செய்தியை அறிந்து நாம் ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அம்பலத்தாடிகளின் நண்பர்கள்,
*நெல்லியடி.*
(C/17857)

# மரண அறிவித்தல்

## தமோதிரம்பிள்ளை பாக்கியரத்தினம்

கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய தமோதிரம்பிள்ளை பாக்கியரத்தினம் லண்டனில் நேற்று முன்தினம் (12-08-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் தமோதிரம்பிள்ளையின் அன்பு மனைவியும், தயா, தவராசா, விநோகுமார், கம்ஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், அம்பிகை, V.T.சிங்கராஜா, சிவபாக்கியம் இராசநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (91206)

தகவல்:
V.T.சிங்கராஜா (சகோதரன்)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மட்டு.நகரிலிருந்து செல்லத்தடை!

## அரசு ஊழியர்களின் தவிப்பு

மட்டக்களப்பு,ஓக.14

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து செங்கலடி கறுப்புப்பாலச் சோதனைச் சாவடி ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்குச் சென்றுவர நேற்றுக் காலை திடீரென்று அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் நகரிலிருந்து பணியிடங்களுக்குச் செல்ல முடியாமல் தவித்ததை அவதானிக்க முடிந்ததாகவும்-

முற்பகலுக்குச் சற்று முன்னர் பொதுமக்கள் செல்லமட்டும் அனுமதி வழங்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு நகருக்குள் 'வொயிட் அவெனியு' பொலீஸ் சோதனைச்சாவடி ஊடாக வாகனங்களில் வரும் சகலரும் இறககப்பட்டு சோதனையிடப்படுவதாகவும் -

பயணிகளின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வாகன இலக்கம் ஆகியவற்றை சோதனைச்சாவடியில் குறிப்பிட்டு கையொப்பமிடக் கோரப்படுவதாகவும் - கூறப்படுகிறது.

கடந்த திங்கள் முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ள போதிலும் மட்டக்களப்பில் இந்த சோதனைச்சாவடிகளில் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (ஒ)

# 50 வருடங்களில் இல்லாத அளவில் அம்பாந்தோட்டையில் வரட்சி பஞ்சத்தால் மக்கள் அவதி!

கொழும்பு,ஓக.14

நாட்டின் தென்கோடிப் பகுதியான அம்பாந்தோட்டைப் பகுதியில் வரலாறு காணாத வரட்சியினால் சுமார் 40 ஆயிரம் பேர் பட்டினியில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த செஞ்சிலுவை சர்வதேசக் குழு, பசியால் வாடுபவர்களைக் காப்பாற்றத் தேவைப்படும் 7 லட்சம் அமெரிக்க டொலர்களைத் தந்துதவுமாறு சர்வதேசச் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

2ஆண்டுகளாக இங்கு மழை பெய்யாததால், கடந்த 50 வருடங்களில் மிக மோசமான வரட்சி தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் -

இதனால் கிணறுகள் ஏரிகளில் தண்ணீர் முற்றாக வற்றியதுடன், கால்நடைகள் உண்பதற்கு ஒரு இலைகூட இல்லாமற் போய்விட்டதாகவும் - கூறப்படுகின்றது.

தொடர்ச்சியாக 4 பயிர்ச்செய்கைகள் அழிந்ததால் கடனாளிகளாகி விட்ட இப்பகுதி விவசாயிகள், இந்த ஆண்டின் இறுதியில் பருவமழை பெய்தாலும் பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே அடுத்துவரும் 6 மாதங்களுக்கு சுமார் 40 ஆயிரம் மக்களுக்கு உணவளிக்கத் திட்டம் வகுககப்படுகின்றது. (ஒ)


## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

G.A.Q. 2001, 1st in Com., B.A. Part I,B.A. (Final)
பிரிவுகளுக்கான
"துரித மீட்டலும் வினாவிடை வகுப்புக்களும்"
(அண்மையில் இடம்பெறவுள்ள பரீட்சைக்கானது)
☆ அரசியல் ☆ தமிழ் ☆ பொருளியல்
☆ நாடகமும் அரங்கியலும் ☆ மெய்யியல் ☆ புவியியல்
☆ ஆங்கில இலக்கியம் ☆ ஆங்கில மொழியியல்
☆ ஆங்கிலம் ☆ வர்த்தகம் ☆ கணக்கியல்
☆ இந்து, கிறிஸ்தவ நாகரிகம்
ஆரம்பம் - நாளை (15.08.2001) புதன்கிழமை
மற்றும் 2002 G.A.Q., 1st in Com. ஆகிய வகுப்புகள் இடம் பெறுகின்றன (சனி, ஞாயிறு தினங்களில்)
(C/17847) - பதிவாளர்.

## சமையற்காரர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும்
பிரபல சைவ உணவகம்
ஒன்றுக்கு
சமையற்காரர்கள் தேவை
உடன் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
36,38, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (91146)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
செல்வி புஸ்பமாலா சங்கரப்பிள்ளை அவர்களின்
அன்புத் தந்தையார்

### பொ. சங்கரப்பிள்ளை (J.P.)

(முன்னாள் அதிபர், யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்)
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மிகவும் மனம் துயருறுகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உத்தியோகத்தர்கள், நலன் விரும்பி சங்கம்,
மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
(C/17860) மருதங்கேணி.

## இலங்கையருக்கு ஆஸியில தண்டனை

கொழும்பு,ஓக.14

நீர்கொழும்பில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சட்ட விரோதமாக 24 பேரைக் கடத்திய 9 படகோட்டிகளுக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றம் ஒன்று தலா 20 வருடச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இலங்கையரான இந்த 9 பேர் மீதான வழக்கு விசாரணை முடிவில் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (3)

### தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் போது ஏற்படும் நீண்டநேரம் தாக்குப்பிடிக்கும் வெடிப்பு, பெருஞ் சேதத்தையும் அதிஉச்ச வெப்பத்தையும் வெளிவிடும். வெப்பநிலை எல்லை மீறி உயர்ந்து நாசத்தை ஏற்படுத்தும்.

ஆப்கானிஸ்தானில் குகைகளிலே ஒளித்திருந்த முஜாகுதீன் கெரில்லாக்களுக்கு எதிராக இந்த றொக்கெட்டுக்களைத்தான் ரஷ்யப் படைகள் பயன்படுத்தினர்.

1999இல் தயாரிக்கப்பட்ட றொக்கெட் லோஞ்சர்களை பெறுவதற்கே இடைத்தரகர் ஒருவர் மூலம் இலங்கை இராணுவம் ஒப்பந்தம் செய்தது.

ஆனால் 1989 இல் தயாரிக்கப்பட்ட 600 லோஞ்சர்களும், 1991இல் தயாரிக்கப்பட்ட 400 லோஞ்சர்களுமாக காலாவதியான ஆயுதங்களே விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதில் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை இராணுவ உயர் அதிகாரிகளுக்கு லஞ்சமாக வழங்கப்பட்டுள்ளது.

- இப்படி பல விவரங்களை அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. (உ)

### திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இது போன்ற பல கேள்விகள் அந்தப் பிரசுரத்தில் எழுப்பப்பட்டுள்ளன.

தற்போது நடக்கும் சட்டப்படியான வேலைப் போராட்டத்துக்கு அரசு பொறுப்பான பதில் தராது விட்டால், நாளை புதன்கிழமை பிரதேச செயலர் அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டம் நடத்த இருப்பதாகவும் அந்தப் பிரசுரத்தில் துறைமுக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். ஊழியர்களின் போராட்டத்தால் வடக்குக்குச் சரக்குகளைக் கொண்டு செல்லும் கப்பல்கள் தாமதமடைய நேரிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-ஒ)


## புலமைப்பரிசில் வினாத்தாள் - விடைகளுடன்

| | | |
|---|---|---|
| பொஸ்கோ | - | யாழ். |
| மதுரா | - | நீர்வேலி |
| சூர்யாபார்மசி | - | அச்சுவேலி, ஆவரங்கால். |
| பிரியங்கா | - | உடுப்பிட்டி |
| மொடேன் ஸ்ரோர்ஸ் | - | நெல்லியடி. |
| அம்பிகா | - | பருத்தித்துறை |
| மல்ற்றி சென்ரர் | - | பண்டத்தரிப்பு. |
| லக்ஸ்சி | - | சித்தங்கேணி. |
| புஸ்பநாதன் | - | சங்கானை |
| கந்தசாமி கடை | - | காரைநகர். |

(91208)

## எமது புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந்த், ராம்கி
நடித்த
★விஸ்வநாதன் ராமமூர்த்தி
★குட்டி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/17856)

## எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

விஜயகாந்,ராம்கி,விவேக்,ரோஜா
நடித்த
★ விஸ்வநாதன் ராமமூர்த்தி
நாசர், கௌசல்யா
நடித்த
★ குட்டி
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்,
யாழ்ப்பாணம்.
(C/17855)


# ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் செலூலர் மூலம் விடை அறிந்த மாணவரின் குட்டு அம்பலம்

கொழும்பு,ஓக.14

தற்போது நடைபெறும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் செலூலர் தொலைபேசி மூலம் சரியான விடைகளைக் கேட்டு எழுதிய பரீட்சார்த்தி ஒருவர் சீதுவ ரத்தொலுகமவில் கையும் களவுமாக மேற்பார்வையாளரிடம் மாட்டிக்கொண்டார்.

இந்தப் பரீட்சார்த்தி தனது இடது கையில் முறிவு ஏற்பட்டிருப்பதாகக் கூறி, காதுடன் கையைப் பொத்திப் பிடித்தபடி பரீட்சை எழுதியதாகவும்-

சந்தேகப்பட்ட மேற்பார்வையாளர் சோதித்தபோதே குட்டு அம்பலமானது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

முறைகேடான வழியில் பரீட்சை எழுதியதாகக் கூறப்படும் மேற்படி பரீட்சார்த்திக்கு எதிராக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கடந்த ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையின் போது ஹங்வெல்லவில் ஒரு பரீட்சார்த்தி 'வோக்கி டோக்கி' மூலம் விடையறிந்து எழுதியபோது கண்டு பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் சில தனியார் பாடசாலைகளில் அமைந்த பரீட்சை நிலையங்களில் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு கைக்கடிகாரம் போன்ற விலையுயர்ந்த பரிசுப் பொருள்கள், ரொக்கப்பணம் ஆகியவற்றைப் பரிசளித்து அவர்களின் ஒத்துழைப்போடு முறைகேடாக வினாக்களுக்கு விடை எழுத முற்பட்ட பரீட்சார்த்திகள் சிலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். (ஒ)

# மீன்பிடியியல் கற்கை நெறிக்கு 23 இல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் தோற்றுவதற்கு விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகளும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சை யாழ்.பல்கலைக்கழகத்தில் மட்டுமே நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

இதனால் வன்னி மற்றும் கிழக்கு மாகாணம் ஆகிய பகுதிகளில் இருந்து நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரும் நேர்முகப் பரீட்சைக்காக யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-6)

### ஹிஸ்புல்லா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் ஹிஸ்புல்லா தம் மிச்சையாகத் தலைவர் போன்று செயற்படுகின்றார் என்றும் -

தெரிவித்து ரூவூப் ஹக்கீமின் அணியின் செயலாளர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு கொழும்பு மாவட்ட நீதிபதி இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தார். (உ-3-9)

### ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயநலத்துக்காகவே இந்த நிபந்தனைகள் அந்த அமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ளன.

அடுத்த தேர்தல் ஒன்றில் தமக்கு ஏற்ற சூழ்நிலைக்கான அடித்தளத்தை இடும் வகையில் அந்த அமைப்பு செயற்படுகின்றது.

அந்த அமைப்பின் நிபந்தனைகளை ஏற்று, தகுதி காண் அரசு அமைக்க அரசு முன்வந்தால், அரசில் இருந்துமது கட்சி வேளியேறும் - என்று அவர் கூறினார்.

ஜே.வி.பியின் நிபந்தனைகள் குறித்து ஆராய்வதற்காக பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழு இன்று மாலை ஜனாதிபதியின் தலைமையில் கூட இருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

சிரேஷ்ட அமைச்சர்களின் எதிர்ப்பு வலுவடைந்துள்ளதால் இன்று இந்தக் கூட்டம் இடம்பெறுவது கேள்விக்குரியது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. (உ-3)

## கண்ணீர் அஞ்சலி

### பொன்னையா சங்கரப்பிள்ளை (J.P.)

எமது சங்கத்தின் நீண்டகால உறுப்பினரும் யா/உடுத்துறை மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் வடமராட்சி கல்வி அபிவிருத்திச் சபையின் உறுப்பினரும் மருதங்கேணிப் பகுதியின் கல்வி வளர்ச்சியில் அரும்பணியாற்றியவருமான அன்னாரின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
(C/17859) மருதங்கேணிக்கிளை.

## மரண அறிவித்தல்

### வெங்கடாசக்குருக்கள் இரத்தினசாமிக்குருக்கள்

(நெற்கொழு வைரவர் ஆலயம், தோமீமந்தறை சிறி மனோன்மணி அம்மாள் ஆலயங்களின் பிரதம குரு)

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெங்கடாசக்குருக்கள் - செல்லம்மா அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் வெங்கடாசக்குருக்கள் இரத்தினசாமிக்குருக்கள் நேற்று (13.08.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலகிருஷ்ணக்குருக்கள், மகேஸ்வரன் ஐயா, பாஸ்கரன்குருக்கள் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலகிருஷ்ணவேணியின் அன்பு மாமனாரும் நரேந்தர், நகுலேஸ்வரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.08.2001) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பாலகிருஷ்ணக் குருக்கள்,
இ.மகேஸ்வர ஐயர்,
இ.பாஸ்கரன் குருக்கள்
(பிள்ளைகள்)

பாடசாலையடி,
கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.
(C/17861)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.